வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 13.09.2024 வெள்ளிக்கிழமை இதழ் : 256 பக்கங்கள் : 12



## யாழில் ஆற்றிய உரைக்காக அநுரவை கைது செய்யுங்கள்

### சி. ஐ. டியில் முறைப்பாடு

கொழும்பு, செப். 13

யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரைக்காக அநுர குமார திஸநாயக்கவை கைது செய்ய வேண்டும் என்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

"அநுரகுமார யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரையின் மூலம் இனங்களுக்கு இடையே அமைதியின்மை ஏற்படும் அபாயம் உள்ளது", என்று கூறி தேசப்பற்றுள்ள மக்கள் சக்தி இந்த முறைப்பாட்டை அளித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி 11

## வடக்கு - கிழக்கு இணைக்கப்படாது

### யாழில் நாமல் ராஜபக்ஷ

யாழ்ப்பாணம், செப். 13

பொதுஜன பெரமுனவின் அரசாங்கத்தில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைக்கப் படாது என்று அந்த கட்சியின் ஜனாதிபதி வேட் பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணம் வந்த நாமல் ராஜ பக்ஷ வீரசிங்கம் மண்டபத்தில் பரப்புரையில் ஈடுபட்ட பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு கூறி னார்.

மேலும், மாகாணங்களுக்கு பொலிஸ், காணி அதிகாரங்கள் வழங்கப்படாது. 11

## காணாமலாக்கப்பட்டோர் விவகாரம்:

# 3 வருடங்களில் தீர்வு தருவேன்!



## ஜனாதிபதி ரணில்

### பொறுப்புக்கூறலுக்கும் தயார்

கொழும்பு, செப். 13

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்னைக்கு 3 வருடங்களுக்குள் நிரந்தரத் தீர்வை நான் தருவேன் என்று தெரிவித்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறவும் தயாராக உள் ளார் என்றும் கூறியுள்ளார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நேற்று வியாழக்கிழமை கொழும்பில் செய்தியாளர்களை சந்தித்து அவர்களின்கேள்வி களுக்கு பதிலளித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பில் பல்வேறு மட்டங் களில் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

குறிப்பாக, வலிந்து காணா மல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறு தல், நிதி வழங்குதல் போன்ற செயல்பாடுகளை முன்னெ டுக்கவுள்ளேன் - என்றும் அவர் இதன்போது கூறினார். (ஐ)



## ரணிலின் வெற்றி மூலமே தீர்வுகளை எட்ட முடியும்!

### அமைச்சர் டக்ளஸ் சொல்கிறார்

யாழ்ப்பாணம், செப். 13

ரணிலின் வெற்றியின் மூலமே தமிழ் மக்க ளின் அபிவிருத்தி - அன்றாட பிரச்னைகள் - அரசியல் உரிமைசார் பிரச்னைகளுக்கு தீர்வை எட்ட முடியும். இதுவே, உண்மையும்கூட - இவ்வாறு கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் அவரின் கட்சிப் பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 11

## சஜித்துக்கான ஆதரவில் எந்த மாற்றமும் இல்லை

### தமிழ் அரசுக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, செப். 13

"ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வை ஆதரிப்பது தொடர்பான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை" - இவ்வாறு இலங்கை தமிழ் அரசு கட்சியின் பதில் பொதுச் செயலா ளர் ப. சத்தியலிங்கம் அறிவித்துள்ளார்.

நேற்று அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்.

அந்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு, 11

## பிரதான வேட்பாளர்களுடன் பேச்சுக்குப் போகமாட்டேன்!

### பொது வேட்பாளர் அரியநேத்திரன்



மட்டக்களப்பு, செப். 13

தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற ரீதியில் என்னை எந்தப் பிர தான கட்சிகளின் தலைவர்களும் பேச அழைக்கவில்லை. அவர்கள் அழைத்தாலும் நான் செல்லப் போவதுமில்லை. எடுத்த முடிவில் இறுதிவரை 11

## கட்சி தீர்மானத்தை ஏற்றேன் என சுமந்திரன் கூறுவது முழுப்பொய்!

### தமிழ் அரசின் சிறீதரன் அறிவிப்பு

கிளிநொச்சி, செப். 13

"சஜித் பிரேமதாஸவை ஆதரிக் கும் முடிவை நான் ஏற்றேன் என்று சுமந்திரன் கூறுவது முற்றிலும் பொய். தமிழ்ப் பொது வேட்பா ளரை ஆதரிக்கும் நிலைப்பாட் டிலிருந்து நான் பின்வாங்கப் போவ தில்லை", என்று 11



ADB
ASIAN DEVELOPMENT BANK

## இலங்கைக்கு 10 கோடி டொலர்

### ஆசிய வங்கி ஒப்புதல்!

கொழும்பு, செப். 13


இலங்கையின் வரவு - செலவு திட் டத்துக்கு ஆதரவாக 10 கோடி டொலர் களை கடனாக வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஒப்புதல் அளித்துள் ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி நேற்று முன்தினம் இந்தக் கடன் அனுமதியை வழங்கியது.

இந்தக் கடன் தொகையை நீர் வழங் கல் மற்றும் சுகாதாரதுறை சீர்திருத் தங்களுக்காக பயன்படுத்த முடியும். காலநிலை மாற்றத்தை எதிர் கொள்ளவும் நீண்டகால நிலைத் தன்மையை உறுதி செய்யவும் இது வாய்ப்பாக அமையும் என்றும் தெரி விக்கப்பட்டது. (ஐ)

## யாழ் - கொழும்பு ரயில் சேவையை ஆரம்பிப்பது மேலும் தாமதமாகும்!

### மாஹோ - அ'புரம் பரீட்சார்த்த பயணம் இரத்து



கொழும்பு, செப். 13

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவையை ஆரம்பிக்கும் நோக்கில் நேற்று நடைபெறவிருந்த மாஹோ முதல் அநு ராதபுரம் வரையான பரீட்சார்த்த ரயில் பயணம் இரத்து செய்யப்பட் டது. இதனால், யாழ்ப்பாணம் 11

### மனித உரிமைகள் பேரவையில்

## இலங்கைக்கு காலநீடிப்பு? ஒக். 7இல் தீர்மானமாகும்!

ஜெனிவா, செப். 13

இலங்கை தொடர்பான 51/1 தீர்மானத்துக்கு மீண்டும் நீடிப்பு வழங்குவதா என்பது தொடர் பில் எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதி அறிவிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத் தொடர் கடந்த 9ஆம் திகதி - திங்கட்கிழமை ஆரம்பமானது.

கூட்டத் தொடரின் முதல் நாளிலேயே இலங்கை விவ காரம் விவாதிக்கப்பட்டது. 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# விதிமீறல் முறைப்பாட்டையடுத்து வர்த்தக நிலையங்கள் அகற்றம்!

வவுனியா, செப். 13

வவுனியாவில் தேர்தல் விதிமீறல் முறைப்பாட்டை அடுத்து புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை அகற்ற மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா - மன்னார் வீதியில் கடவுச்சீட்டு பணிமனைக்கு முன்பாக வீதியோரத்தில் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக, வவுனியா மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இதற்கமைய, பொலிஸார், நகர சபை செயலாளர், தேர்தல் திணைக்கள உத்தியோகத்தர்கள் நேற்றைய தினம் அங்கு சென்று வியாபாரிகளுடன் கலந்துரையாடினர்.

இதன்போது, ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னர், இந்தப் பகுதியில் இயங்கிவந்த 6 வியாபார நிலையங்களை தவிர்த்து புதிதாக அமைக்கப்பட்ட ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களையும் அகற்றுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# சிறார் துஷ்பிரயோகம்: 6 மாதங்களில் மாத்திரம் 491 முறைப்பாடுகள் பதிவு

கொழும்பு, செப். 13

நடப்பு ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் சிறுவர் பாலியல் துன்புறுத்தல்கள் தொடர்பில் 491 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அநுராதபுரம் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மகேந்திர தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில், குழந்தைகள் துஷ்பிர யோகம் தொடர்பான 202 வழக்குகள் பதிவாகியுள் ளன. அத்துடன், மாவட்ட மற்றும் பிராந்திய அதிகாரிகளுக்கு 289 முறைப்பாடுகள் 1929 குழந்தை ஆதரவு சேவை எண் மூலம் கிடைத்துள்ளன.

இது தவிர நன்னடத்தை திணைக்களத்தின் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அதிகாரிகளுக்கு சிறுவர் உரிமைகள் மீறல் தொடர்பாக 464 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

மேலும், சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தொடர்பாக பொலிஸ், சட்ட உதவி ஆணைக்குழு, மாகாண நன்னடத்தை திணைக்களம் மற்றும் மருத்துவமனைளுக்கும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் கூறினார். (ஐ)

# திஸ்ஸ அத்தநாயக்கவின் அறிக்கை; ரூ. 100 கோடி கோரி ஹரிணி வழக்கு

கொழும்பு, செப். 13

தேசிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்தார்.

தேசிய மக்கள் சக்தி கட்சி ஆட்சி அமைத்தவுடன் கண்டியில் நடைபெறவுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க ஸ்ரீதலதா பெரஹராவை நிறுத்துவதாக தான் கருத்து தெரிவித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவின் வெறுக்கத்தக்க இழிவான அறிக்கையினால் அரசியல்வாதி என்ற வகையில் தாம் கட்டிக்காத்து வரும் நற்பெயருக்கும் புகழுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டுள்ளார்.

100 கோடி ரூபா நட்டஈடு கோரி தேசிய மக்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தாக்கல் செய்த இந்த மனுவில் ஐக்கிய மக்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் பிரபல தொலைக் காட்சி நிறுவனம் ஒன்று பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# கெஹலியவை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவு!

கொழும்பு, செப். 13

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை எதிர்வரும் ஒக்ரோபர் 3 மற்றும் 25ஆம் திகதிகளில் மேல்நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, சிறைச்சாலை அதிகாரிகளால் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார் இதன்போதே மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகள் தொடர்பிலேயே அவர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வெளிநாட்டு மதுபானம் கடத்திய ஆறு பேர் கைது!

கொழும்பு, செப். 13

வரி செலுத்தாமல் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மதுபானம் மற்றும் பொருட்களுடன் பெண் ஒருவர் உட்பட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விமான நிலைய குற்றப்புலனாய்வு பிரிவு அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது வெளிநாட்டு மதுபான போத்தல்கள் 159, வெளிநாட்டு சிகரெட்கள் 175 மற்றும் தங்க ஆபரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

இவற்றை கொண்டுவந்த குற்றச்சாட்டில் 24 முதல் 70 வயதுக்கு உட்பட்ட 6 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் கொழும்பு, கம்பஹா மாவட்டங்களை சேர்ந்தவர்களாவர்.

## ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் தற்காலிகமாக மூடல்!

கொழும்பு, செப். 13

சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் நேற்று மாலை 6 மணி முதல் தற்காலிகமாக மூடப்பட்டது.

இரண்டு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்துக் குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ)

## பரப்புரை கூட்டம்!

வடமராட்சி, செப். 13

மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகே நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் தேர்தல் பரப்புரைகளில் பங்கேற்கவுள்ளார்.

நாளை காலை யாழ்ப்பாணம் நகரில் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கும் அவர், பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவிலிலுள்ள தேசிய கலை, இலக்கிய பேரவையில் கருத்துரையையும் திறந்த கலந்துரையாடலையும் நடத்துவார்.

பின்னர், மாலை 6 மணிக்கு புத்தூர் கலைமதி கரப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுவார்.

வலி. கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கா. செல்வம் கதிர்காமநாம்பதன் தலைமையில் நடக்கும் இந்தக் கூட்டத்தில் சி. கா. செந்திவேல், சமீர கொஸ்வத்த, சட்டத்தரணி சுவஸ்திகா அருலிங்கம், தர்மசிறீ லங்காபேலி, நி. பிரதீபன் ஆகியோரும் உரையாற்றுவர். (ஐ-02)

## சுக்கிர வார சொற்பொழிவு

யாழ்ப்பாணம், செப். 13

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முகவிலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை இளம் சைவப்புலவர் நித்திய பாபுதரன் "நற்றுணையாவது நமசிவாயவே" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

## சீனி வரி குறைப்பு வழக்கு; ஏப்ரல் 2இல் விசாரணை!

கொழும்பு, செப். 13

கடந்த ஆட்சிக்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட சீனிக்கு விதிக்கப்பட்ட வரி குறைக்கப்பட்டதன் மூலம் அரசாங்கத்துக்கு 1,590 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலிப்பதற்காக எதிர்வரும் ஏப்ரல் 02ஆம் திகதி அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நேற்று எஸ். துரைராஜா, குமுதுனி விக்ரமசிங்க மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அமர்வு முன்னிலையில் பரிசீலிக்கப்பட்டது. இந்த வழக்கு தொடர்பாக ஆட்சேபனைகள் இருப்பின் 8 வாரங்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்று நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

மேலும், நான்கு வாரங்களுக்குள் திருத்தப்பட்ட பிரதிவாதிகள் பட்டியலை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்பின், மனுவை எதிர்வரும் ஏப்ரல் 02ஆம் திகதி அழைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 13.09.2024 வெள்ளிக்கிழமை

குரோதி வருடம், ஆவணி 28

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சஜித்தின் உறுதிமொழி(கள்)

பிரதான வேட்பாளர்களில் ஒருவரான சஜித் பிரேமதாஸ கர்தினால் மல்கம் ரஞ்சித்தை சந்தித்து கலந்துரையாடியிருக்கின்றார். இதன்போது ஓர் உறுதி மொழியையும் வழங்கியிருக்கின்றார். அதாவது, ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு தகுதி தராதரம் பாராது தண்டனை வழங்கப்படுமென்று குறிப்பிட்டிருக்கின்றார். நடைபெறவுள்ள தேர்தலில் பெரும்பான்மையான முஸ்லிம் கட்சிகள் சஜித் பிரேமதாஸவையே ஆதரிக்கின்றன. இதில், முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் - ஈஸ்டர் தாக்குதலில் குற்றஞ்சாட்டப்பட்ட சிலர் தற்போது சஜித் பிரேமதாஸவுடன் கைகோத்திருக்கின்றனர். இவ்வாறானதொரு பின்புலத்தில் ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்கப் போவதாகக் கூறுவது ஒருபுறம் நகைச்சுவையாக இருப்பினும்கூட அரசியலில் இவ்வாறான வாக்குறுதிகளுக்கு எவ்வித பெறுமதியும் இருந்ததில்லை என்பதையும் நாம் அறிவோம்.

ஒப்பீட்டடிப்படையில் வாக்குறுதிகள் எதனையும் தொட்டுப் பார்க்கக்கூட முடியாதவராக இருப்பவராக சஜித் பிரேமதாஸவே உள்ளார். ஏனெனில், அனைவரின் ஆதரவுடனும் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் அவரின் நோக்கம். இவ்வாறான பின்புலத்தில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்பது ஒப்பீட்டடிப்படையில் மிகவும் பலவீனமான நிலைப்பாடாகும். இவ்வாறானதொரு பலவீனமான நிலைப்பாட்டுக்கு பின்னால் ஏன் தமிழ் அரசுக் கட்சி தொங்கிக் கொண்டிருக்கின்றது? என்ன காரணம்? ஒருவேளை சஜித் பிரேமதாஸ வெற்றிபெற்றால் அவரின் அரசாங்கத்தில் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஏதேனும் உடன்பாடு உண்டா?

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கான பொது வேட்பாளரை எதிர்த்து வருகின்றது - தோற்கடிக்கும் பிரசாரங்களையும் முன்னெடுத்து வருகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவையும் கட்சி எடுத்திருக்கின்றது. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு முன்னாலுள்ள பிரதான சவால் சஜித் பிரேமதாஸவை எதிர்கொள்வதுதான். சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை கேள்விக்கு உள்ளாக்குவதும் அதனை மக்களுக்கு தெளிவுபடுத்துவதும் கூடவே, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பித்தலாட்டத்தை அம்பலப்படுத்துவதும்தான் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியிருக்கும் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பின் பிரதான நோக்கமாக இருக்க வேண்டும்.

சஜித்தின் தகப்பனார் ரணசிங்க பிரேமதாஸ இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்துப் போர்க்கொடி தூக்கியது மட்டுமல்ல, 13ஆவது திருத்தச்சட்டத்தை மோசமாகப் பலவீனப்படுத்தியவர். கூடவே, அதிகாரங்களை மீளவும் பறித்தெடுத்து, இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையை கலைத்தவர். அவரின் மகனான சஜித் பிரேமதாஸ இப்போது, அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தப் போவதாகவும் தகப்பனால் பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளத் தரப் போவதாகவும் கூறுகின்றார். இந்த வாக்குறுதியை நம்பி எவ்வாறு தமிழ் மக்கள் வாக்களிக்க முடியும்? இதிலுள்ள விந்தையான விடயம், அன்று ரணசிங்க பிரமதாஸவை எதிர்த்து தமிழீழ கோரிக்கையை முன்வைத்துவிட்டு இந்தியாவில் அடைக்கலம் தேடிக் கொண்ட வரதராஜப் பெருமாள் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கிறாராம். அரசியலில் இவ்வாறான விந்தைகளுக்கு எப்போதுமே பஞ்சமிருப்பதில்லை. ஆனால், அனைத்து விந்தைகளினதும் பலியாடுகளாக மக்களே இருக்கின்றனர்.

# பழிதீர்க்கும் நோக்கிலேயே தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரா?

## குரலற்றோரின் குரல் அமைப்பு கேள்வி

யாழ்ப்பாணம், செப். 13

அரசும் அதன் அதிகாரமும்தான் எமது தமிழ் அரசியல் கைதிகளை பழிதீர்க்கும் நோக்கில் 30 ஆண்டுகளாக சிறைக்குள் தடுத்து வைத்திருக்கிறதா என்று கேள்வி எழுப்பியுள்ளது குரலற்றவர்களின் குரல் அமைப்பு.

தேசிய சிறைக்கைதிகள் தினமான நேற்று யாழ். ஊடக அமையத்தில் அந்த அமைப்பின் தலைவர் மு. கோமகன் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சுமார் 13 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்திருக்கக்கூடிய இட வசதிகொண்ட சிறைக்கூடங்களுக்குள் 24 ஆயிரம் கைதிகளை திணித்து அடைத்து வைத்திருக்கின்ற நிலையிலேயே சிறைத்துறை இந்த கைதிகள் தின நிகழ்வைக் கடைப்பிடித்து வருகிறது.

இருப்பினும் உணவு, நீர், சுகாதாரம் மற்றும் மருத்துவம் போன்ற அடிப்படை கட்டமைப்புகள் போதுமற்ற நிலையில் பெயருக்காக கொண்டாடப்படுகின்றதா இந்த தேசிய சிறைக் கைதிகள் தினம் என்கின்ற கேள்வி எழுகிறது. இத்தனை மோசமான கட்டமைப்பை கொண்டியங்கும் சிறைக்குள்ளேயே சமூகத்தை நேசித்த எமது தமிழ் அரசியல் கைதிகள் 30 ஆண்டுகளாக வாடிக்கொண்டிருக்கி றார்கள் என்பது எத்தனை கொடூரமானது!

"எமது நாடு ஜனநாயக நாடு. நாம் கருணை அன்பு மிக்கதொரு பாரம்பரிய சமூக, சமயத்தை சார்ந்தவர்கள். மறப்போம் மன்னிப்போம் என்பது எமது கொள்கையில் ஓர் அங்கம்" என மேடை முழக்கம் செய்கின்ற அரசும் அதன் அதிகாரமும்தான் எமது தமிழ் அரசியல் கைதிகளை பழிதீர்க்கும் போக்கில் 30 ஆண்டுகளாக சிறைக்குள் தடுத்துவைத்திருக்கிறதா எனக் கேட்கின்றோம்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்திலே அரசும் அதன் இயந்திரங்களும் மாற்றான் தாய் மனப்போக்குடன் நடந்துகொள்வதன் நோக்கம் என்ன?

காலம் காலமாக கதிரையேறும் சிங்கள ஆட்சி அதிகாரங்கள், தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குச் சூறையாடும் கலாசாரத்துக்கு இனிமேலாவது முற்றுப்புள்ளியிட வேண்டும். மக்களினதும் சர்வதேசத்தினதும் பார்வைக் கோணங்களை திசை மாற்றும் கைங்கரியத்தை கைவிட வேண்டும். நிச்சயமாக இதற்கு மேலும், காலவீணடிப்பு செய்யாமல் தமிழ் மக்களின் தீர்க்கப்பட வேண்டிய அவசர அடிப்படை விடயங்களுக்கு தீர்வைக்கூற வேண்டும்.

குறிப்பாக, இனத்தின் பெயரில் நாளுக்கு நாள் வஞ்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் 10 தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை விடயத்தில், அரசின் உண்மையான இறுதி நிலைப்பாட்டை பொதுவெளியில் தெரிவிக்க வேண்டும் என்பதை "குரலற்றவர்களின் குரல்" மனிதநேய அமைப்பினரான நாம், இந்த ஆண்டு தேசிய சிறைக்கைதிகள் தின பகிரங்க கோரிக்கையாக முன்வைக்கின்றோம்.

அவ்வாறில்லையேல், இந்த நாட்டின் ஆட்சி அதிகாரங்களுக்கும் அதற்குத் துணை செய்யும் குடி மக்களுக்கும் தமிழினத்தின் சாபத்தை தவிர்த்தொதுக்க முடியாது - என்றும் கூறினார்.

(ஐ)

# துரித உணவுகளை உண்பதால் சிறாருக்கு ஒவ்வாமை பாதிப்பு!

கொழும்பு, செப். 13

துரித உணவு வகைகளை உண்பதால் சிறுவர்களுக்கு அடோபிக் எக்ஸிமா எனப்படும் ஒருவித ஒவ்வாமை நோய் ஏற்படும் என கொழும்பு சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் தோல் நோய் மருத்துவர் சிறீயானி சமரவீர தெரிவித்தார்.




நாளை உலக அடோபிக் எக்ஸிமா நோய் தினமாகும். இதையொட்டி நேற்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவா தெரிவித்தார்.

நாட்டில் சுமார் முப்பது சதவீத சிறுவர்கள் அடோபிக் எக்ஸிமா எனப்படும் ஒவ்வாமை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயானது மரபணு ரீதியாக பரவக்கூடியது என்பதுடன் ஆஸ்துமா (முட்டு), வயிற்றுப்போக்கு மற்றும் மூக்கு ஒழுகுதல் போன்றவை இந்த நோய்க்கான அறிகுறிகளாகும்.

இந்த நோய் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் அதிகமாக காணப்படுவதுடன், இளம் பெண்கள் மத்தியிலும் இந்த நோய் அபாயம் அதிகம் உள்ளது என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 13 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 28

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 09.00 - 10.30 |
| ராகு காலம் | : | 10.30 - 12.00 |
| திதி | : | தசமி |



## இன்றைய ராசிபலன்

**மேடம்**
கணவன் - மனைவிக்குள் இருந்து வந்த மோதல்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனதில் இனம்புரியாத பயம் வந்துப்போகும். அதிகாரிகளுடன் வளைந்து கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வாடிக் கையாளர்களிடம் கனிவாகப் பழகுங்கள்.

**மிதுனம்**
சவாலான வேலைகளை சாதாரணமாக முடிப்பீர்கள். மனைவி வழியில் நல்லசெய்தி உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் வரும். புது அதிகாரி உங்களை மதிப்பார். திறமைகள் வெளிப்படும்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். முன்னேறும் நாள்.

**சிம்மம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**கன்னி**
பால்ய நண்பர்கள் ஒருவரை சந்திப்பீர்கள். அரசு அதிகாரிகளின் உதவியால் சில காரியங்களை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**துலாம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். விவாதங்கள் வெற்றி பெறும்.

**விருட்சிகம்**
கணவன் - மனைவிக்குள் அன்பு ஆதரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கை வரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் வேலைகளை விரைந்து முடிப்பீர்கள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டிவரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் அளவாக பழகுங்கள். பொறுமை தேவைப்படும்.

**மகரம்**
எடுத்த வேலைகளை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் உருவாகும். மறைமுக எதிர்ப்புகள் வந்து நீங்கும். அலைச்சலுடன் ஆதாயம் தரும்.

**கும்பம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் விரும்பி வருவார்கள். உத்தியோகத்தில் புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**மீனம்**
கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உறவினர், நண்பர்களால் நன்மை உண்டு. வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் மதிக்கப்படுவீர்கள்.

# மது ஒழிப்பில் ஈடுபட்டால் பா.ம.க. ஆதரவு வழங்கும்

## அன்புமணி திட்டவட்டம்

நாமக்கல், செப். 13

மது ஒழிப்பு மாநாட்டை யார் நடத்தினாலும் ஆதரவு வழங்குவோம் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

நாமக்கலில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழகத்தில் மது, போதைப் பொருட்களால் இளைஞர்கள் அழியும் நிலை உள்ளது. கடந்த 2 நாட்களுக்கு முன் 8 கொலைகள் நடந்தன. இதற்கு முக்கிய காரணம் மதுவும், போதைப் பொருட்களும் தான். பாடசாலை, கல்லூரிகளில் கஞ்சா கிடைக்கிறது. தமிழகத்தில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் சரளமாக கிடைக்கின்றன. இதைப்பற்றி முதல்வருக்கு அக்கறையோ, கவலையோ கிடையாது- என்றார்.



இதேவேளை, விடுதலை சிறுத்தைகள் கட்சி நடத்தும் மது ஒழிப்பு மாநாடு தொடர்பில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அன்புமணி, எங்களுக்கு யாரும் அழைப்பு விடுக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. கடந்த 45 ஆண்டுகளாக பா. ம. க. மது ஒழிப்பு தொடர்பான போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. தமிழகத்தில் வி. சி. க. உள்ளிட்ட கட்சிகள் மது விலக்கு கொள்கையை கொள்கை ரீதியாக ஏற்றுக் கொண்டதற்கு பா. ம. க. தான் காரணம். தமிழகத்தில் உள்ள இளைஞர்கள் மது இல்லாமல் இருக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டதற்கான காரணம் தி. மு. கவும், அ. தி. மு. கவும் தான்.

திராவிட மொடல் என்றால் தமிழகத்தில் மது இல்லாமல் இருக்க முடியாது என்பதுதான். மூன்று தலைமுறைகளை மதுவைக் கொடுத்து ஒழித்துவிட்டார்கள். 4ஆவது தலைமுறையை ஒழிக்கப் பார்க்கிறார்கள். உழைக்கும் மக்கள் மதுவுக்கு அடிமையாக இருக்கிறார்கள். தமிழக அரசு மதுவை விற்கவில்லை மாறாக மதுவை திணிக்கின்றது. தி. மு. கவைச் சேர்ந்த இரு எம். பிக்களின் கம்பனியில் இருந்து தான் 40 சதவீத மதுபானம் அரசு மதுக்கடைக்கு விநியோகிக்கப்படுகிறது.

தமிழகத்தில் கடந்த 5 ஆண்டுகளில் முதலீடு குறைந்துள்ளது. 5 ஆண்டுகளுக்கு முன் இந்திய ளவில் தமிழகம் முதலீடு அளவில் 4ஆவது இடத்தில் இருந்தது. தற்போது 6ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. முதலீட்டை ஈர்ப்பதாக கூறி முதல்வர் ஸ்டாலின் மேற்கொண்டுள்ள வெளிநாட்டுப் பயணம் என்பது ஏமாற்று வேலை- என்றார். (எ)

# ராகுல் காந்தியை இந்திய மக்கள் ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள்

## வானதி எம். எல். ஏ. கடும் எதிர்ப்பு

கோவை, செப். 13

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடர்பில் வெளிநாடுகளில் அவதூறு பரப்பும் ராகுல் காந்தியை மக்கள் மன்னிக்க மாட்டார்கள் என்று தமிழக பா. ஜ. க. சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

மக்கள் சேவை மையம் சார்பில், "விருட்சம்" திட்டத்தின் கீழ் அரசு பாடசாலைகளில் குறுங்காடுகள் வளர்க்கும் திட்டத்தை கோவை சாய்பாபா மேல்நிலைப் பாடசாலையில் பா. ஜ. க. தேசிய மகளிர் அணித் தலைவி வானதி எம். எல். ஏ. ஆரம்பித்து வைத்தார். இதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியவை வருமாறு, மது ஒழிப்புக்காக பா. ஜ. க. பல ஆர்ப்பாட்டங்களை நடத்தியிருக்கிறது. திருமாவளவனுக்கு தி. மு. க. கூட்டணியில் என்ன பிரச்னை என்று தெரியவில்லை.



தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு சரியில்லை. வெளிநாடுகளில் இந்தியா குறித்து அவதூறு பரப்பும் ராகுல் காந்தியை இந்திய மக்கள் மன்னிக்க மாட்டார்கள்- என்றார். (எ)

# நிதி ஒதுக்குவதில் பா. ஜ. க. பாரபட்சம்

## காங்கிரஸ் குற்றச்சாட்டு

சென்னை, செப். 13

2022 - 23, 2023 - 24ஆம் நிதியாண்டில் தமிழகத்தின் இரண்டாம் கட்ட மெட்ரோ ரயில் திட்டத்துக்கு மத்திய அரசு எந்த நிதியையும் ஒதுக்கவில்லை. மொத்தம் 118. 9 கிலோ மீற்றர் தூரமுள்ள இந்தத் திட்டத்துக்கான மதிப்பீடு 63, 246 கோடி ரூபாய். இதில் பெரும்பாலான நிதிச்சுமையை தமிழ்நாடு அரசு ஏற்க வேண்டியிருப்பது மிகுந்த வேதனைக்குரியது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

மெட்ரோ ரயில் திட்ட நிதி ஒதுக்கீட்டின்படி மகாராஷ்டிராவுக்கு 36 சதவீதமும், குஜராத்துக்கு 15. 5 சதவீதமும் ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நான்கு மாநிலங்களுக்கு மட்டும் மொத்த நிதியில் 80 சதவீதம் ஒதுக்கியிருப்பது அப்பட்டமான பாரபட்சமாகும். ஒரு ரூபாய் கூட சென்னை மெட்ரோ ரயில் இரண்டாம் கட்ட திட்டத்துக்கு நிதியளிக்கவில்லை என்பது மத்திய பா. ஜ. க. அரசின் அப்பட்டமான பாரபட்ச செயலாகும். இத்தகைய பாரபட்ச போக்கை பின்பற்றினால் மக்களின் கடும் எதிர்ப்புக்கு பா. ஜ. க. ஆளாக நேரிடும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களிக்கும் உரிமையை கோரி பல்கலை மாணவர்கள் முறையீடு!

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில்

கொழும்பு, செப். 13

**ஜனாதிபதித் தேர்தலில் பல்கலைக்கழக மாணவர்கள் பலருக்கு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் அற்றுப்போவதாக தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.**

இது தொடர்பான முறைப்பாடு பவ்ரல் அமைப்பினால் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், ருகுணு மற்றும் களனி பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் சிலருக்கே இவ்வாறு வாக்களிப்பதற்கான சந்தர்ப்பம் அற்றுப் போவதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை, நாள் முழுவதும் கல்வி நடவடிக்கைகள் இடம்பெறுவதால் தூரப்பிரதேசங்களில் வசிக்கும் மாணவர்கள் இந்த பிரச்னையை எதிர்நோக்குவதாக மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் ஆராய்ந்து தீர்வுகளை வழங்குவதற்கு பல்கலைக்கழக உபவேந்தர்களுடன் கலந்துரையாடவுள்ளதாக நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டார்.

# பச்சிலைப்பள்ளியில் தொழிற் சந்தை

கிளிநொச்சி, செப். 13

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும், மனித வலு வேலைவாய்ப்பு திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த தொழிற்சந்தை, நேற்று முன் தினம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதம விருந்தினராக, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ.தஜெயசீலன் பங்கேற்றார்.

தொழிற்சந்தையில், 15 தொழில் தருநர்கள் பங்கேற்றதுடன், 5 தொழிற்பயிற்சி நிறுவனங்களும் பங்கேற்றன.

தந்த தொழில் வழங்கும் நிறுவன பிரதிநிதிகள், தமது நிறுவனங்கள் ஊடாக, எவ்வாறு தொழிலை பெற்றுக்கொள்ள முடியும் என்பது தொடர்பிலும், அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் விளக்கமளித்தனர்.

இந்த நிகழ்வில், பச்சிலைப் பள்ளி பிரதேச உதவி பிரதேச செயலாளர் ச.குணஜா, பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ற.மாலதி, நிர்வாக உத்தியோகத்தர் சி.சாயந்தினி, மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் மனித வலு வேலைவாய்ப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள், தொழில் வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வேலை வாய்ப்புக்காக காத்திருந்த நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகள் என பலர் பங்கேற்றனர்.

(அ)



# இ.போ.ச வவுனியா சாலையின் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

வவுனியா, செப். 13

தமது ஊழியர்களை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி, இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலை ஊழியர்கள் நேற்று பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

தாக்குதல் மேற்கொண்டவர்களை கைது செய்யுமாறு வலியுறுத்தி பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

தமது கோரிக்கைக்கு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் வடக்கு மாகாண ரீதியாக பணிப் புறக்கணிப்பு முன்னெடுக்கப்படும் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவத்தனர்.

இதனிடையே பணிப்புறக்கணிப்பு காரணமாக பயணிகள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகியிருந்தனர். வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் கடமையில் இருந்த அரச பேருந்தின் நடத்துநர் மற்றும் ஊழியர்கள் மீது வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்தின் ஊழியர்கள் தாக்குதலை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவத்தில் காயமடைந்த ஊழியர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(அ)

# இறையாண்மை முறிகளை கொள்வனவு செய்த முதலீட்டாளர்கள் அவற்றை விற்கும் நிலைமை!

## இலங்கையின் அரசியல் நிச்சயமற்ற தன்மையால்

கொழும்பு, செப். 13

இலங்கையின் அரசியல் நிச்சயமற்ற தன்மையை அடிப்படையாகக் கொண்டு, இறையாண்மை முறிகளை கொள்வனவு செய்துள்ள முதலீட்டாளர்கள் அவற்றை விற்பனை செய்யும் நிலைமை உருவாகியுள்ளதாக உலகின் முன்னணி பொருளாதார செய்தி வழங்குநரான புளும்பேர்க் இணையத்தளம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் காரணமாக நாட்டில் நிலவும் அரசியல் நிச்சயமற்ற தன்மையை கருத்திற்கொண்டு இலங்கை தொடர்பில் தமது பங்களிப்பை குறைப்பதற்கு முதலீட்டாளர்கள் தீர்மானித்துள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புளும்பேர்க் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளமைக்கு அமைய 2030 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடையவுள்ள இறையாண்மை முறிகளின் மதிப்பு தற்போது டொலருக்கு நிகராக 3 சதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

இது பெப்ரவரி மாதத்தில் இருந்து இதுவரையான காலப் பகுதிக்குள் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியாகும்.

சந்தை மீதான அழுத்தம் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள புளும்பேர்க் இணையத்தளம், கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளுக்கு நாட்டின் தலைமைத்துவம் மாறுவதன் மூலம் தாக்கம் ஏற்படலாம் என முதலீட்டாளர்கள் மத்தியில் சந்தேகம் எழுந்துள்ளதாக தெரிவித்துள்ளது.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள வேலைத்திட்டத்தை மீளாய்வு செய்வதற்கோ அல்லது மீண்டும் கலந்துரையாடுவதற்கோ எதிர்பார்த்துள்ளதாக நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளமை இதற்கான காரணமாகும்.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதிய திட்டத்தின் கீழ் மேற்கொண்ட நடவடிக்கைகளால் அவரது ஜனரஞ்சகத்தன்மை குறைவடைந்துள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியின் அனுர குமார திசாநாயக்க அவரது பிரதான சவாலாக மாறியுள்ளதாகவும் புளும்பேர்க் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# முகாமைத்துவ, வணிக கற்கைகள் பீடத்தின் ஏற்பாட்டில் "நாளைய முதலீடு" இளங்கலை ஆய்வு மாநாடு ஆரம்பம்!

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் "இளங்கலை ஆய்வு மாநாடு - இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

"நாளைய முதலீடு - வளர்ந்துவரும் நிதித்துறைப் போக்குகளை ஆராய்தல்" என்ற தொனிப் பொருளுடன் சீ.எவ்.ஏ ஸ்ரீலங்காவின் அனுசரணையுடன் முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் நிதி முகாமைத்துவத் துறை இந்த ஆய்வு மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட கேட்போர் கூடத்தில் நிதித்துறைப் பேராசிரியர் திருமதி ரதிராணி யோகேந்திரராஜா தலைமையில் இடம் பெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன், சீ.எவ்.ஏ ஸ்ரீலங்கா குழுமத்தின் பணிப்பாளர்களில் ஒருவரான நுவான் ஜெயவர்த்தன ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் நிதியியல் பேராசிரியர் திருமதி சாந்தரூபி புவனேந்திரா மற்றும் சீ.எவ்.ஏ ஸ்ரீலங்கா குழுமத் தலைவர் அருண பெரேரா ஆகியோர் முதன்மை உரைகளை வழங்கவுள்ளனதுடன், மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் மற்றும் சிறப்புத் தேர்ச்சிக்கான வழிகாட்டல் அமர்வும் இடம்பெறவுள்ளது. இந்த ஆய்வு மாநாட்டில் உள்ளூர், வெளியூரைச் சேர்ந்த 44 இளங்கலை மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று நிதி முகாமைத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் திருமதி எல். கெங்காதரன் தெரிவித்தார்.

(அ)

# வட்டுக்கோட்டையில் பாரதி வீதி நேற்று முன்தினம் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், செப். 12

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 103ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று முன் தினம் வட்டுக்கோட்டையில் பாரதி வீதி திறந்து வைக்கப்பட்டது.

வட்டு தென்மேற்கு பகுதியில் உள்ள குறித்த வீதிக்கு பாரதி வீதி என பெயர் சூட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

விருந்தினர்கள் மங்கள இசை வாத்தியங்கள் முழங்க அழைத்து வரப்பட்டு, மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதனை தொடர்ந்து விருந்தினர்களின் உரைகள், வீதி திறந்து வைப்பு வைபவம் என்பன இடம் பெற்றன.

யாழ். நண்பர்கள் அமைப்பின் தலைவர் கலாநிதி சிதம்பர மோகன் தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்வில், மறவன்புலவு சச்சிதானந்தம் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்ததுடன், மதகுருமார், வலிமேற்கு பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார், வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் சண்முகராஜா பாலரூபன், கிராம சேவையாளர் திரு.சிவபால்ன் சிவகுமார், பேராசிரியர் பொன் பாலசுந்தரம்பிள்ளை, கலாநிதி கந்தையா சிவராஜா, மருத்துவர் எம்.பி. நடராஜா, வைத்தியசூரி செ. பரமசிவம்பிள்ளை கா.கோபால கிருஸ்ணன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)



# 12 ரயில்கள் தற்காலிகமாக சேவையிலிருந்து நிறுத்தம்!

கொழும்பு, செப். 13

12 ரயில்கள் தற்காலிகமாக சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மொத்தம் 12 ரயில்கள் தற்காலிகமாக சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

12 ரயில் மின் பெட்டிகள் இயக்கத்திலிருந்து அகற்றப்பட்டு திருத்தப்பணிகளுக்காக இரத்மலானையில் உள்ள ரயில் தளத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக, ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்ப பணியாளர்கள் பற்றாக்குறையால் திருத்தப் பணிகள் தாமதமாகியுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராஜதந்திர உறவை வலுப்படுத்தும் தலைவரை தெரிவு செய்யவேண்டும்

## அமைச்சர் சுசில் கோரிக்கை

கொழும்பு, செப். 13

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், அறிவும் அனுபவமும் உள்ள தலைவரையே மக்கள் தெரிவுசெய்ய வேண்டும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.**

உலக நாடுகளுடன் இராஜதந்திர ரீதியான உறவை வலுப்படுத்தக்கூடிய தலைவரை மக்கள் தெரிவுசெய்ய வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியினரே முதலில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

உலக நாடுகளுடன் சிறந்த தொடர்பைக் கொண்ட தலைவர் நாட்டுக்கு தெரிவுசெய்யப்பட வேண்டும். வெளிநாடுகளுக்குச் சென்று சிங்கள மொழியில் உரையாற்ற முடியுமா?

நாட்டை பரீட்சார்த்தமாக நடத்திச் செல்ல ஒருவருக்கு அதிகாரத்தை வழங்குவதா என்பது பற்றி மக்கள் சிந்திக்க வேண்டும்.



கல்வித்துறையில் அடுத்த வருடம் முதல் மாற்றத்தை ஏற்படுத்துவோம். புத்தகப் பை சுமை குறைக்கப்படும். பரீட்சைகளின் எண்ணிக்கையும் குறைக்கப்படும். நாம் நாட்டில் ஆரோக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். ஆதலால் அறிவும் அனுபவமும் உள்ள தலைவரையே மக்கள் தெரிவு செய்ய வேண்டும்-என்றார். (அ)

# தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கு

## திஸ்ஸ அத்தநாயக்க கூறுகிறார்

கொழும்பு, செப். 13

தமிழ் மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பான்மையானோரின் ஆதரவு தமக்கு உள்ளதாக, நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் காரியாலயத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு கிழக்கு பிராந்தியங்களில் நாம் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். அந்த வகையில் நோக்கும் போது தமிழ் மக்கள் பிரதிநிதிகளில் பெரும்பான்மையானோர் எம்முடன் உள்ளனர்.

அவர்களுக்கு சஜித் பிரேமதாசவின் மீது நம்பிக்கை உள்ளது. காரணம் வடக்கு கிழக்கு மக்கள் மாத்திரமல்லாது ஒட்டுமொத்த நாட்டு மக்களின் தலைவராகவும் அவர்கள் சஜித் பிரேமதாசவை ஏற்றுக்கொண்டுள்ளனர்.



தமிழ் சிங்கள முஸ்லீம் மக்கள் மாத்திரம் அல்ல. அனைத்து மத மக்களினதும் ஆதரவு சஜித் பிரேமதாசவுக்கே உள்ளது. அந்த வகையில் தமிழ் மக்களின் ஆதரவும் கூட தற்போது சஜித் பிரேமதாசவுக்கே உள்ளது-என்றார். (அ)

# நிபந்தனை அடிப்படையிலேயே சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு!

## முஸ்லிம் காங்கிரஸ் அறிவிப்பு

கொழும்பு, செப். 13

13 ஐ அமுல்படுத்தவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே சஜித்திற்கு ஆதரவை வழங்க தீர்மானித்ததாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவை வழங்க தீர்மானித்ததாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். (அ)

# பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதன் மூலம் தமிழர் பலம் கொண்ட சக்தியாக உருவாகலாம்

## இரேனியஸ் செல்வின் கருத்து

யாழ்ப்பாணம், செப். 13

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு அளிப்பதன் மூலம் தமிழ் மக்கள் உறுதியான பலங்கொண்ட சக்தியாக உருவாக முடியும் என தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் உறுப்பினர் இரேனியஸ் செல்வின் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தங்களை பலங்கொண்ட தேசிய இனமாக அரசில், பொருளாதாரத்தில் வலுப்படுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அந்த நோக்கிற்காகவே தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பினரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை கூறினார். (அ)

# பொருளாதார வீழ்ச்சியை விரும்பாதோர் சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள்

## ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 13

பொருளாதார வீழ்ச்சியை விரும்பாதவர்கள், செப்ரெம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள் என ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இன்னும் 20 வருடங்களில் சிறந்த நாட்டில் வாழ முடியும் என்ற நம்பிக்கையை இந்நாட்டு இளைஞர்களுக்கு வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செப்ரெம்பர் 21ஆம் திகதி நாட்டை உருவாக்க எரிவாயு சிலிண்டருக்கு வாக்களிக்க வேண்டும். அநுரவுக்கும் சஜித்துக்கும் நாட்டைக் கட்டியெழுப்ப எந்த திட்டமும் இல்லை. கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுத்து, அனைவரும் வாழக்கூடிய நாட்டை உருவாக்கியுள்ளேன்.

அன்று பொருட்களின் விலை அதிகரித்தித்து காணப்பட்டது. ரூபாவின் பெறுமதி பெருமளவில் அதிகரித்திருந்தது. இன்றும் மக்கள் வாழ்க்கை சுமைகளுக்கு முகங்கொடுக்கிறார்கள். இருப்பினும் ஓரளவு சுமூகமான நிலைமை வந்திருக்கிறது. பொருட்களின் விலையும் குறைந்திருக்கிறது. அடுத்த ஐந்து வருடங்களில் சுமையை மேலும் குறைக்க எதிர்பார்க்கிறோம்.

திருக்கோவில் பகுதியிலும் விவசாய அபிவிருத்திக்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இங்குள்ள கடல் வளத்தினாலும் பயனடைய முடியும். மீன்பிடித் தொழில், சுற்றுலாத்துறை, கனிய வளர்த்தகத்தைப் பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். விவசாயத்தை நவீனமயப்படுத்தி உலக உணவு உற்பத்தியில் பங்கெடுப்போம்.

மாகாண சபையை செயற்படுத்தி இப்பகுதி மக்களின் அபிவிருத்திக்கும் இளையோருக்கு நம்பிக்கை தரும் நாட்டையும் கட்டியெழுப்ப வேண்டும்.

சஜித்தினாலும், அநுரவினாலும் அதனை செய்ய முடியாது. வாய் பேச்சினால் எவர் வேண்டுமானாலும் சாதிக்கலாம்.

எனவே பொருளாதார வீழ்ச்சியை விரும்பாதவர்கள் செப்டம்பர் 21 சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களியுங்கள் இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது, திருக்கோவிலுக்கு அபிவிருத்தியும் கிட்டாது.-என்றார். (அ)

# நான் வெற்றி பெற்றால் மகிந்ததான் பிரதமர்!

கொழும்பு, செப். 13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாம் வெற்றி பெற்றால், பிரதமர் பதவியை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கவுள்ளேன் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு, அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அதேநேரம் தாம் வெற்றி பெற்றால் எதிர்வரும் 22ஆம் திகதியே பாராளுமன்றம் கலைக்கப்படும்.

தமது தரப்பினரின் ஒத்துழைப்புடன் இடைக்கால அமைச்சரவை ஒன்று உருவாக்கப்படும் எனவும் நாமல் கூறினார். (அ)

# கல்வித்துறையில் விசேட மாற்றங்கள்

## கோருகிறார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, செப். 13

அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்திற்காக கல்வித் துறையில் விசேட மாற்றங்கள் அவசியம் என ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இலவசக் கல்வியை முழுமையாக பாதுகாப்பதோடு மாற்றுக் கல்விக்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்த வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தொழில் ரீதியான போதனையாளர்களின் மாநாடு நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தொழில் ரீதியான போதனையாளர்களுடைய செயல்பாடுகள் தற்போதைய கல்வி முறையோடு பொருந்த வேண்டும். இலவச கல்விக்காக நாம் முழுமையாக செயற்படுவோம்.

இலவசக் கல்வி முறையை பலப்படுத்துவதோடு மாற்றுக் கருவிகளுக்கான சந்தர்ப்பத்தையும் பலப்படுத்த வேண்டும். அறிவை மையமாகக் கொண்ட பொருளாதாரத்திற்காக கல்வித் துறையில் விசேட மாற்றங்கள் அவசியமாகின்றது. சர்வதேச தொழிற்சந்தைக்கு தேவையான துறைகளுக்கு ஊழியர்களை வழங்குகின்ற விதத்தில் கல்வித் துறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிறந்த கல்வியை பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். மேலதிக வகுப்புகளை தடை செய்வது அதற்கான தீர்வல்ல. தனியார் கல்வியைப் பெற்று, தனியார் பல்கலைக்கழகங்களிலே பட்டப்படிப்பை நிறைவு செய்திருக்கின்றார்கள். அரசியலில் ஈடுபடுகின்ற போது ஒரு நிலைப்பாட்டிலும் குடும்ப உறுப்பினர்களுக்காக வேறு ஒரு நிலைப்பாட்டை பெற்றுக் கொள்வதும் பொருத்தமான விடயம் அல்ல-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல வைத்தியரை மாற்றினால் என்ன நடக்கும் என சிந்தியுங்கள்

### ரணிலை ஆதரிக்கும் பிரசாரத்தில் அலி சப்ரி



கொழும்பு, செப். 13

**நல்ல வைத்தியரிடம் நீங்கள் சிகிச்சைக்குச் சென்று அதனால் நல்ல பலன் கிட்டும்போது, அந்த வைத்தியரை மாற்றினால் என்ன நடக்கும் என்பதை மக்களாகிய நீங்கள் சிந்திக்கவேண்டும் என அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரண்டு வருடங்களுக்கு முன்பு நாடு பெரும் இக்கட்டான நிலைமையில் இருந்தது. அப்போது ஐ.எம்.எப். நாட்டில் அனைவரையும் ஒன்றுபட்டுச் செயற்பட முன்வருமாறு வலியுறுத்தியது.

ஆனால், எதிர்க்கட்சியினர் அதற்கு முன்வரவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கு பிரதமர் பதவியை வழங்கவும் தயாராக இருந்தோம். அப்போதும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்று மக்கள் பட்ட கஷ்டங்கள் இன்று உள்ளனவா என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நல்ல வைத்தியரிடம் நீங்கள் சிகிச்சைக்குச் சென்று அதனால் நல்ல பலன் கிட்டும் போது, அந்த வைத்தியரை மாற்றினால் என்ன நடக்கும் என்பதையும் மக்களாகிய நீங்கள் சிந்திக்க வேண்டும்.

சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை சமூகத்துடன் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும். சில கட்சிகள் தெற்கின் கட்சிகள் செல்லும் திசைக்கு எதிர்த்திசையில் பயணிக்க வேண்டும் என்பதையே கொள்கையாகக் கொண்டுள்ளனர்.

சிறுபான்மை மக்களின் கோரிக்கைகள் அனைத்தையும் தருவதாக ஜனாதிபதி உறுதியளித்த பின்பும் அவருக்கு ஆதரவளிப்பதற்கு என்ன தடையிருக்கின்றது?

சஜித் கூறுவதைப் போல் வெளிநாட்டு செல்வந்தர்களின் உதவிகளை மட்டும் நாம் நம்பியிருக்க முடியாது. ஜே.வி.பி. ஒரு கொள்கையில்லாத கட்சியாகச் செயற்படுகின்றது - என்றார்.

(அ)

# நாட்டை கொள்ளையிடுவதற்கான நல்லதொரு குழுவினர் ரணிலுடன்!

### அநுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 13

நாட்டில் நீண்ட காலமாக அதிகாரத்தில் இருந்தவர்கள் கோடிக்கணக்கான மக்களின் சொத்துக்களை கொள்ளையடித்து, நாட்டை நெருக்கடிக்குள் தள்ளியுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கேகாலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ரணில் விக்கிரமசிங்கவிடம் தற்போது நல்லதொரு குழுவினர் இருக்கின்றனர். பிரசன்ன ரணதுங்க, லொஹான் ரத்வத்த, ரோஹித அபேகுணவர்தன, மஹிந்தானந்த அளுத்கமகே போன்றவர்கள் அவருடன் இருக்கின்றனர். கொள்ளையிடுவதற்கு நல்லதொரு குழுவினர்.

இவர்களினால் நாடு சோமாலியாவாக மாறிவிடும். இவர்கள் அனைவரும் எமது நாட்டில் காணப்பட்ட அனைத்து உற்பத்தி துறைகளையும் வீழ்ச்சியடையச் செய்தனர். உற்பத்தி துறையை மேம்படுத்தாது அனைத்து துறைகளையும் இல்லாதொழித்தனர்.

வெங்காயம், பயறு, கௌப்பி, குரக்கன் உள்ளிட்ட அனைத்து பொருட்களையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தனர். இவர்கள் ஒருபோதும் நாட்டை மேம்படுத்துவதற்கு எண்ணவில்லை. நாடு மேம்படுமானால் இவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும்-என்றார்.

(அ)

# சமகால நிலவரம் கருதியே சஜித்துக்கு ஆதரவளிக்க முடிவு

### கீதா குமாரசிங்க கூறுகிறார்

கொழும்பு, செப். 13

நாட்டின் சமகால நிலைவரத்தை கருத்திற்கொண்டே சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க தீர்மானித்ததாக பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்குவதற்கு நீண்டகாலமாக திட்டமிடவில்லை.

இந்த நாட்டின் மக்கள் இப்போதே சிறந்த முடிவினை எடுத்து விட்டார்கள்.

சஜித் பிரேமதாசவை இந்த நாட்டின் ஜனாதிபதியாக தெரிவுசெய்வதே மக்களின் தீர்மானமாகும். அவரது வெற்றி உறுதியாகி விட்டது.

மக்கள் இம்முறை அவரை அமோகமாக வெற்றி பெற செய்வார்கள். அதற்காக மக்கள் தொடர்ந்தும் அர்பணிப்புடன் செயலாற்றி வருகின்றனர்.

எனவே நானும் இம்முறை நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியை தெரிவுசெய்யும் தேர்தலில் சிறந்த முடிவினை எடுத்துள்ளேன்.

இது என்னுடைய தனிப்பட்ட உரிமையாகும்-என்றார். (அ)

# தமிழர் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்

### சிறிதுங்க ஜயசூரிய கருத்து

கொழும்பு, செப். 13

தேசியப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான அடிப்படையாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். அத்துடன், பொது மக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து இராணுவம் உடன் மீளப்பெறப்படும் என்று ஐக்கிய சோஷலிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சிறிதுங்க ஜயசூரியவால் தேசிய இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறையாக முன்வைக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு-

அனைத்து அரசியல் கைதிகளும் எவ்வித நிபந்தனைகளுமின்றி உடன் விடுதலை செய்யப்பட வேண்டும்.

காணாமல்போனவர்கள் தொடர்பில் உடனடியாக விசாரணைகளை மேற்கொண்டு அதன்மூலம் கிடைக்கப்பெறும் தகவல்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

சிவில் நிர்வாகத்தில் இராணுவ செயற்பாட்டை நிறுத்தல், பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் இருந்து இராணுவம் மீளப்பெறப்பட வேண்டும்.

வலுக்கட்டாயமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்கள் அவற்றின் அசல் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். தேசிய இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கையாக 13 ஐ முழுமையாக அமுல்படுத்தி அதிகாரப்பகிர்வுக்கு புத்துயிர் வழங்க வேண்டும்.

தேசிய இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்-என்றுள்ளது.

(அ)

# மகிந்தவை கொலை செய்ய சதி முயற்சி!

கொழும்பு, செப். 13

விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டாலும், அதன் அலை இன்னும் ஓயவில்லை என பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை கொலை செய்வதற்கான சதித்திட்டம் இன்னமும் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் வெற்றிக்காக ஹிரியாலையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று அனுரகுமார திஸாநாயக்க, மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பை நீக்கி உத்தியோக பூர்வ இல்லத்திலிருந்து வெளியேற்றினால் அவரின் பாதுகாப்பு கேள்விக்குறியாகிவிடும்.

காலி முகத்திடல் தாக்குதல் இடம்பெற்ற மே ஒன்பதாம் திகதி அலரி மாளிகையில் வைத்து மகிந்த ராஜபக்சவை கொல்வதற்கான ஆயுதங்கள் இருந்தன.

எனினும், திருகோணமலை கடற்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு அவர் உயிரை காப்பாற்றினார்-என்றார்.

(அ)

# "போதைப்பொருள் பணத்தில் பிரசாரம் மேற்கொள்ளவில்லை"

கொழும்பு, செப். 13

பாதாள உலகக் குழுவினரிடமிருந்தும் போதைப் பொருள் வர்த்தகர்களிடமிருந்தும் பணம் பெற்றுக்கொண்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவில்லை என தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச நாணய நிதியம் பற்றிக் குறிப்பிட்டு தேர்தல் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை என்பது கல்லில் செதுக்கப்படவில்லை.

அடுத்ததாக யார் ஆட்சி அமைத்தாலும் மக்களுக்குத் தகுந்தவாறு கலந்தாலோசித்து மாற்றிக்கொள்ளலாம். இது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஆரம்பம் முதலே ஈடுபட்டவன் என்ற வகையில் முழு விபரங்களையும் நான் அறிந்து வைத்துள்ளேன்.

எனது தேர்தல் பிரசாரங்கள் அனைத்தும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு கிராமங்களிலும் மதகுருமார்களை சந்தித்து எனது கொள்கை பற்றி தெளிவுபடுத்தியுள்ளேன்.

நான் வியாபாரிகளிடமிருந்து பணம் பெற்றுக்கொள்ளவில்லை. அதேபோல பாதாள உலகக் குழுவினரிடமிருந்தும் போதைப் பொருள் வர்த்தகர்களிடமிருந்தும் பணம் பெற்றுக்கொண்டு தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவில்லை-என்றார்.

(அ)

# பிரபல கலைஞர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு

கொழும்பு, செப். 13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் தாம் ஆதரவளிப்பதாக, இலங்கையின் பிரபல கலைஞர்கள் அறிவித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பிரபல கலைஞர்கள் இதனைத் தெரிவித்தனர்.

நாட்டில் பல சமயங்களில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளால் கலைத்துறை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் பின்னர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்திட்டங்களினால் நாட்டின் கலைத்துறை நல்ல நிலைக்குத் திரும்பியதாகவும், அவர்கள் தெரிவித்தனர்.

கலைத்துறைக்கும் நாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல எதிர்காலத்தைப் பெற்றுத் தரும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாய்ந்தமருதில் அரசியல் மேடையில் இரு குழுக்களுக்கு இடையே மோதல்

## கலகமடக்கும் பொலிஸார் களத்தில்



சாய்ந்தமருது, செப். 13

**அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதில் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இயலும் சிறீ லங்கா கூட்டம் நிறைவு பெற்ற பின்னர் இரு குழுக்களுக்கு இடையில் மோதல் நிலை உருவானது.**

இதனால் குறித்த வளாகத்தில் பதற்றம் ஏற்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு கலகமடக்கும் பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

ஜனாதிபதி ரணிலுக்கு கைலாகு கொடுக்க முண்டியடித்தபோது ஏற்பட்ட வாய்த்தர்க்கமே இந்த குழு மோதலுக்கு காரணம் எனக் கூறப்படுகிறது. (எ)

# அல் பஹ்ரியா வித்தியாலயம் மாகாண மட்டத்தில் அசத்தல்

மட்டக்களப்பு, செப். 13

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடந்து முடிந்த கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயம் 5 தங்கப் பதக்கங்களையும், 5 வெள்ளிப் பதக்கங்களுடன், 3 போட்டியில் கிழக்கு மாகாண மட்ட புதிய சாதனை மற்றும் ஆண்களுக்கான அஞ்சல் ஓட்டப் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டு கிழக்கு மாகாண மட்டத்தில் மூன்றாம் இடத்தை பெற்றுக்கொண்டது.

பாடசாலை அதிபர் எம். ஏ. சலாம் உள்ளிட்ட கல்விச் சமூகம் சாதனை படைத்த மாணவர்களுக்கும் பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். (எ)



வாக்களிப்பது எப்படி?

# அம்பாறை மாவட்டத்தில் பரவலாக சுவரொட்டிகள்

கல்முனை, செப். 13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி? என்பது தொடர்பான விழிப் புணர்வு சுவரொட்டிகள் அம்பாறை மாவட் டத்தில் பரவலாக ஒட் டப்பட்டு வருகின்றன.




வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வால் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன.

அனைவரையும் வாக்களிக்க செய்யும் வகையிலும் அத்தோடு முறையாக எவ்வாறு வாக்களிப்பது எனும் விடயங்கள் அடங்கிய சுவரொட்டிகளே ஒட்டப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் தற்போது பரவலாக சகல பகுதிகளிலும் இந்த சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு வருகின்றன என்று அந்த அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் து. காத்தவராயன் தெரிவித்தார்.

# புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு அனுமதி அட்டை



கல்முனை, செப். 13

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இருந்து இந்த வருடம் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கின்ற மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டையில் ஒப்பமிடுதலும், அவர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வும் பாடசாலை அதிபர் ஏ. ஜீ. எம். ரிஷாத் தலைமையில் நடைபெற்றது.

பரீட்சையின் போது மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றிய விவரங்கள் முன்வைக்கப்பட்டதோடு, பரீட்சை எழுதும் வரைக்கும் வழமைக்கு மாறான உணவுப் பழக்க வழக்கங்களை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் பெற்றோர்களுக்கு அறிவுரையும் வழங்கப்பட்டது.

மேலும், மாணவர்கள் அனைவரும் சிறப்பான முறையில் பரீட்சையில் தோற்றி வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தி பெறவேண்டும் என வாழ்த்தி, இனிப்புப் பண்டங்களும் வழங்கி ஆசிர்வதிக்கப்பட்டனர்.

ஆரம்பப் பிரிவு பகுதித் தலைவர் டி கே. எம். மௌசீன் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதி அதிபர் எம். ரீ. ஏ. முனாப், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், தரம் 05 கற்பிக்கும் ஆசிரியை மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அறிவிப்பாளர் போட்டி

# மாணவர் இருவர் இறுதி போட்டிக்கு



கல்முனை, செப். 13

இலங்கை மொரட்டுவ பல்கலைக்கழக மாஸ் மீடியா கழகம் அகில இலங்கை ரீதியில் இணையத்தளத்தினூடாக நடத்திய அறிவிப்பாளர் போட்டியில் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் இருவர் அரை இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசிய ரீதியில் 14 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியைச் சேர்ந்த எம். காயிட் கைஸ் மற்றும் எம். றிமாஸ் ஆகிய இரு மாணவர்களும் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலிருந்து 4 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ)

# நற்பிட்டிமுனை நூலகத்தில் எழுத்தறிவு தின நிகழ்வுகள்

கல்முனை, செப். 13

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கரைவாகு மேற்கு நற்பிட்டிமுனை பொது நூலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த உலக எழுத்தறிவு தின சிறப்பு நிகழ்வுகள் நூலக மண்டபத்தில் நேற்று நடைபெற்றன.

கல்முனை மாநகர சபை ஆணையாளர் என். எம். நௌபீஸின் ஆலோசனையின் பேரில் உதவி ஆணையாளர் ஏ. எஸ். எம். அஸீமின் வழிகாட்டலில் நூலக வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு, நூலகர் எஸ். எம். ஆர். அமினுதீன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இரண்டு சமாதான பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த 40 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சிறப்பு நிகழ்வில் நூலகத்தின் வாசகர் வட்ட தலைவர் ஏ. அப்துல் கபூர், செயலாளர் எஸ். சிராஜுதீன் ஆகியோரும் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினர். (எ)




# கிண்ணியா மத்திய கல்லூரியில் விஞ்ஞான செய்முறை கண்காட்சி

திருகோணமலை, செப். 13

பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான பாடத்துக்கான செயன்முறை அறிவை விருத்தி செய்யும் வகையில் திருகோணமலை, கிண்ணியா மத்திய கல்லூரியில் தரம் 10 மற்றும் தரம் 11 மாணவர்கள் ஒழுங்கு செய்திருந்த விஞ்ஞான செய்முறை கண்காட்சி கல்லூரியில் நடைபெற்றது.

புத்தகக் கல்விக்கு மேலதிகமாக செயன்முறை பயிற்சியின் போது மேலதிக அறிவை மாணவர்களுக்கு வழங்கும் நோக்கில் கல்லூரி அதிபரின் ஆலோசனையின் பேரில் விஞ்ஞான ஆசிரியர்களின் வழிநடத்தலில் இந்தக் கண்காட்சி நடைபெற்றது.




இந்தக் கண்காட்சியில் அருகிலுள்ள பாடசாலை மாணவர்களும் பங்கேற்று பயன்பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த பாடசாலைமீது இஸ்ரேல் தாக்குதல்

## ஐ. நா. பணியாளர்கள் ஆறு பேர் உட்பட பலர் பலி!



காஸா, செப். 13

**காஸாவில் இடம்பெயர்ந்த பலஸ்தீனர்கள் தங்கியிருந்த பாடசாலை மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் ஐ. நாவின் பணியாளர்கள் ஆறு பேர் உட்பட 14 கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர். விமானத் தாக்குதல் இடம்பெற்றது என்று ஐ. நா தெரிவித்துள்ளது.**

காஸாவின் மத்தியில் உள்ள நுசெய்ரட்டின் இரு பாடசாலைகள் தாக்குதலுக்குள்ளாகின. இதில் கொல்லப்பட்டவர்களில் பலஸ்தீன அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பின் புகலிட முகாமையாளர் உட்பட பலர் அடங்குவர் என்று ஐ. நா. தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாடசாலை மைதானத்தில் அமைந்திருந்த ஹமாஸின் கட்டுப்பாட்டு நிலையத்தின் மீது துல்லியமான தாக்குதலை மேற்கொண்டதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் இடம்பெற்றவேளை அங்கு 5000இற்கும் அதிகமானவர்கள் காணப்பட்டனர் என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் யுத்தம் ஆரம்பித்தது முதல் இதுவரை ஐந்து தடவைகள் இந்தப் பாடசாலை மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளது என ஐ. நா. தெரிவித்துள்ளது. இந்தப் பாடசாலையில் இடம்பெயர்ந்த சுமார் 12000 பேர் தங்கியுள்ளனர் என ஐ. நா. குறிப்பிட்டுள்ளது.

காஸாவில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் பாடசாலைகளை தொடர்ச்சியாக தாக்கி வரும் இஸ்ரேல் ஹமாஸ் அமைப்பை இலக்கு வைப்பதாக விளக்கமளித்து வருகிறது.

# பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளான 402 சிறுவர்கள் மீட்பு, 171 பேர் சிக்கினர்

மாலே, செப். 13

மலேசியாவின் 20 சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டனர் என்று கருதப்படும் 402 சிறுவர்களையும் பதின்ம வயதினரையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஒரு வயது முதல் 17 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களை மீட்டுள்ளோம். இவர்கள் பல்வேறு விதமான துஷ்பிரயோகங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மத ஆசிரியர்கள் உட்பட 171 பேரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பிரபலமான இஸ்லாமிய அமைப்புடன் தொடர்புடையவை. எனினும், அந்த அமைப்பு இந்த சம்பவத்துக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று தெரிவித்துள்ளது.

(எ)

# அமெரிக்காவால் உக்ரைனுக்கு 700 மில்லியன் டொலர் நிதியுதவி

கீவ், செப். 13

உக்ரைனுக்கு மேலும் 700 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கும் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் நேற்று 928 நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர். இந்தப் போரில் உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன.

இந்த நிலையில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் உக்ரைன் சென்றுள்ளார். அவர் கீவ் நகரில் அமைச்சர்கள், அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார். அப்போது, மனிதாபிமான அடிப்படையில் உக்ரைனின் மின்சாரம், கல்வி, சுகாதாரம் ஆகிய அடிப்படை கட்டமைப்பு திட்டங்களுக்கு அமெரிக்கா 700 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்கவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# விநாயகர் சிலை ஊர்வலத்தின்போது கர்நாடகாவில் வெடித்தது வன்முறை

## 144 தடை உத்தரவு பிறப்பிப்பு

பெங்களூ, செப். 13

கர்நாடகாவில் விநாயகர் சிலையை கரைக்க ஊர்வலமாக கொண்டு சென்றபோது வன்முறை வெடித்தது. இதனால் அங்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தியா முழுவதும் கடந்த 7ஆம் திகதி விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட்டது.

அந்த வகையில் கர்நாடக மாநிலம் மாண்டியா மாவட்டம் படரிகொபலு என்ற கிராமத்தில் வைக்கப்பட்டிருந்த விநாயகர் சிலையை அப்பகுதியை சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் இரவு நீர்நிலையில் கரைக்க ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

நாகமங்களா என்ற பகுதியில் இஸ்லாமிய மத வழிபாட்டு தலம் அமைந்துள்ள பகுதி அருகே ஊர்வலம் சென்றபோது இரு தரப்பினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இரு மதத்தினர் இடையே ஏற்பட்ட மோதல் வன்முறையானது. இரு தரப்பும் ஒருவர் மீது ஒருவர் கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். மேலும் சாலையின் இருபுறமும் இருந்த தள்ளு வண்டி கடைகள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றை அடித்து நொறுக்கி தீவைத்தனர். இந்த வன்முறையை தொடர்ந்து அப்பகுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

மோதல் சம்பவத்தை அடுத்து நாகமங்களாவில் உடனடியாக 144 தடை உத்தரவு அமுலுக்கு வந்தது.

(எ)

# பாராளுமன்றத்துக்குள் நுழைந்த போராட்டக்காரர்களால் பதற்றம்

மெக்சிக்கோ சிற்றி, செப். 13

மெக்சிக்கோவில் நீதித்துறை சீர்திருத்தம் குறித்து பாராளுமன்றம் ஆராய்ந்து கொண்டிருந்தபோது திடீரென உள்ளே நுழைந்த போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர்.

நீதித்துறை சீர்திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு ஆளும் கட்சியான மொரேனாவுக்குத் தேவையான வாக்குகள் கிடைத்திருந்த நிலையிலேயே போராட்டக்காரர்கள் பாராளுமன்றத்துக்குள் நுழைந்தனர்.

மெக்சிக்கோவின் நீதித்துறை சீர்திருத்த முயற்சிகளுக்கு மாணவர்களும், நீதித்துறை ஊழியர்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

நீதிபதிகளை தெரிவு செய்யும் முறையை அறிமுகப்படுத்தவுள்ள இந்த சீர்திருத்த திட்டத்தால் நீதித்துறையின் சுதந்திரத்துக்கு பெரும் ஆபத்து ஏற்படும் என ஆய்வாளர்களும் விமர்சகர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர்.



மெக்சிக்கோ நாட்டின் தேசிய கொடியையும் நீதித்துறை சீர்திருத்த முயற்சிகளுக்கு எதிரான வாசகங்களையும் ஏந்திய போராட்டக்காரர்கள் நீதித்துறை வீழ்ச்சியடையாது என கோஷமிட்டுள்ளனர்.

இதேவேளை, பாராளுமன்றத்துக்குள் நுழைந்த போராட்டக்காரர்களுடன் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(எ)

# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை

சியோல், செப். 13

வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது.

அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வரும் நாடு வடகொரியா.

கொரிய தீபகற்பத்தில் வடகொரியா - தென்கொரியா இடையே பல ஆண்டுகளாக மோதல் நீடித்து வருகிறது. தன் எதிரி நாடுகளாக கருதும் தென்கொரியா, ஜப்பான், அமெரிக்காவை சீண்டும் வகையில் வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. மேலும், தங்கள் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் வந்தால் தாக்குதல் நடத்துவோம் என வடகொரியா எச்சரித்து வருகிறது.

இந்த நிலையில், வடகொரியா நேற்று மீண்டும் ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது என்று தென்கொரியா தெரிவித்துள்ளது. பாலிஸ்ரிக் ஏவுகணையை ஏவி சோதனை நடத்தியதாகவும், ஏவுகணை வடகிழக்கு கடல் பகுதியில் விழுந்ததாகவும் தென்கொரியா தெரிவித்துள்ளது. இந்த ஏவுகணை சோதனையால் கொரிய தீபகற்பத்தில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

(எ)

# பலி எண்ணிக்கை 41, 000ஐ தாண்டியது

ஜெருசலேம், செப். 13

ஹமாஸ் அமைப்பினரைக் குறிவைத்து காஸா மீது இஸ்ரேல் படைகள் நடத்தி வரும் தாக்குதல்களால் பலி எண்ணிக்கை 41, 084 ஆக அதிகரித்தது என்று பலஸ்தீன சுகாதாரத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. மேலும் 95 ஆயிரத்து 29 பேர் படுகாயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் போரில் இதுவரை 150இற்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர் என்றும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

(எ)

# சிறந்த நாடுகளின் பட்டியலில் சுவிற்சர்லாந்துக்கு முதலிடம்

## 33ஆவது இடத்தில் இந்தியா

புதுடில்லி, செப். 13

உலகின் சிறந்த நாடுகளின் பட்டியலில் சுவிட்சர்லாந்து முதல் இடம் பிடித்துள்ளது. யு. எஸ். நியூஸ் அண்ட் வேர்ல்ட் ரிப்போர்ட் இதழ் 2024ஆம் ஆண்டுக்கான உலகின் சிறந்த நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இந்தப் பட்டியலில் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இம்முறையும் சுவிட்சர்லாந்து முதல் இடம்பிடித்துள்ளது. 2ஆவது இடத்தில் ஜப்பான், 3ஆவது இடத்தில் அமெரிக்கா, 4ஆவது இடத்தில் கனடா, 5ஆவது இடத்தில் அவுஸ்திரேலியா ஆகியவை உள்ளன.

வாழ்க்கைத் தரம், தொழில் முனைவு, சாகசம், சுறுசுறுப்பு, பாரம்பரியம், கலாசார நோக்கம் உட்பட 10 தன்மைகளின் அடிப்படையில் இந்தப் பட்டியல் உருவாக்கப்பட்டுள்ளது.

89 நாடுகள் இடம்பெற்றுள்ள இந்தப் பட்டியலில் இந்தியா 33ஆவது இடத்தில் உள்ளது.

குறித்த பட்டியலில் முதல் 25 இடங்களில் ஐரோப்பிய நாடுகள் அதிகம் இடம்பெற்றுள்ளன. ஆசியாவிலிருந்து ஜப்பான், சிங்கப்பூர், சீனா, தென்கொரியா ஆகிய நாடுகளே முதல் 25 இடங்களில் உள்ளன.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் நீதிபதியை இழிவுபடுத்தி சுவரொட்டிகள் ஒட்டிய மூவர் கைது!

## தனியார் பஸ் சாரதி ஒருவரும் உள்ளடக்கம்

கொழும்பு, செப். 13

**மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி எம்.எம்.எம். மிஹாலை இழிவுபடுத்தும் வகையில் சுவரொட்டிகளை கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் ஒட்டிய தனியார் பஸ் சாரதி உட்பட மூவர் கைது செய்யப்பட்டதாக கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.**

சந்தேக நபர்களுடன், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள் மற்றும் நான்கு கையடக்கத் தொலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவரும், கைது செய்யப்படவுள்ள பிரதான சந்தேக நபரும் மோட்டார் சைக்கிளில் சென்று இடங்களைச் சுட்டிக் காட்டுவதுடன், தற்போது கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேகநபர்கள் முச்சக்கரவண்டியில் பயணித்து சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 28ஆம் திகதி, கோட்டை புகையிரத நிலையத்துக்கு அருகில், சுங்கத்துக்கு அருகில், அளுத்கடை உயர்நீதிமன்றத்துக்கு அருகாமை, பெலவத்தை, பத்தரமுல்லை, கல்கிஸை போன்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் மேல் நீதிமன்ற நீதிபதியை அவமதிக்கும் வகையில் பல சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

இது தொடர்பில் மேல்மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி விசாரணைகளை நடத்தி சந்தேக நபர்களை கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்திருந்ததுடன், மேல் நீதிமன்ற நீதிபதி கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்கும் முறைப்பாடு செய்திருந்தார்.

இது தொடர்பான முறைப்பாடு தொடர்பான உண்மைகளை நீதிமன்றத்தில் தெரிவித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்து, சிசிரிவி காட்சிகளை ஆராய்ந்து, தொலைபேசி பதிவுகளை ஆராய்ந்து தகவல்களைப் பெற்றனர்.

விசாரணையில், சிசிரிவி காட்சிகள் மூலம் முச்சக்கரவண்டியின் பதிவு இலக்கத்தை உறுதிப்படுத்தி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முச்சக்கரவண்டியின் சாரதியை அடையாளம் காண முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பின்னர் குறித்த நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது குறித்த முச்சக்கரவண்டியை பிலியந்தலை மடபட பொல்ஹேன பிரதேசத்தில் உள்ள ஒருவருக்கு விற்பனை செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அந்த முகவரியின்படி முச்சக்கரவண்டியை வாங்கிய நபரும் அதில் பயணித்த மற்றுமொருவரும் சுவரொட்டிகளை ஒட்டியது தெரியவந்துள்ளது. மேலும், மற்றொரு நபரின் அறிவுறுத்தலின் பேரில் இந்த பணி மேற்கொள்ளப்பட்டது என தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் கைத்தொலைபேசியை பரிசோதித்தபோது, ஒட்டப்பட்ட சுவரொட்டிகளின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு பிரதான சந்தேக நபரின் கையடக்கத் தொலைபேசிக்கு அனுப்பப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. அவரே சுவரொட்டிகளை ஒட்டுமாறு அறிவுறுத்தியதும் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் இருவரிடமும் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின்போது, பிரதான சந்தேக நபருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை மஹரகம பத்திரகொட பிரதேசத்தில் வைத்து கைது செய்ய முடிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான சந்தேக நபர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் தொடர்வதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 22 மற்றும் 44 வயதுடைய மாத்தளை பன்னிபிட்டிய ஆரவல, கஹாபொல மடபட மற்றும் பல்லேபொல ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள். (அ)



# வவுனியா சிறையில் 9 கைதிகள் விடுதலை

## 17 கைதிகளுக்கு பொது மன்னிப்பு

வவுனியா, செப். 13

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் 09 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் 17 கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளபோதிலும், அவர்களில் 8 பேர் மீது வேறு குற்றங்கள் தொடர்பான வழக்குகள் காணப்படுவதால், 09 பேர் மாத்திரம் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிய குற்றங்கள் மற்றும் சிறிய அபராத தொகையைச் செலுத்த தவறிய சிறைக் கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டனர். (அ)

# மதுபோதையில் பஸ்ஸை செலுத்திய சாரதி கைது!

கொழும்பு, செப். 13

மது போதையில் சொகுசு பஸ் ஒன்றை செலுத்திச் சென்றதாக கூறப்படும் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொரலஸ்கமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

பொரலஸ்கமுவ பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

இரத்தினபுரி பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய சாரதியே கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹொரணையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இந்த சொகுசு பஸ்ஸில் 22 பயணிகள் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து, அந்த பயணிகள் அனைவரும் மற்றுமொரு பஸ்ஸுக்குமாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இந்திய பிரஜை உட்பட 6 பேர் விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, செப். 13

சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்ட 3 கோடி ரூபா பெறுமதியான பொருட்களுடன், இந்திய பிரஜை உட்பட 6 பேர், நேற்று முன் தினம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய பிரஜை ஒருவரும், கொழும்பு, கொழும்பு செட்டியார்தெரு, வத்தளை, ஹற்றன் மற்றும் கொட்டகலை ஆகிய பிரதேசங்களை சேர்ந்த நபர்களும், குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் நேற்று முன் தினம் அதிகாலை 4.30 மணியளவில், இந்தியாவில் இருந்து, இரு வேறு விமானங்களில், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதன்போது, அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேக நபர்களிடம் இருந்து, 159 மதுபானப் போத்தல்கள், சொக்கலட் வகைகள், 5 கிலோ கிராம் ஏலக்காய், நகைகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் ஆடை என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

அதனையடுத்து, சந்தேக நபர்கள், மேலதிக விசாரணைகளுக்காக, கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# தேர்தல் காரணமாக பஸ்களில் 99 வீத ஆசனங்கள் முன்பதிவு!

கொழும்பு, செப். 13

நீண்ட வார விடுமுறை மற்றும் தேர்தல் காரணமாக, அரச மற்றும் தனியார் பஸ்களில் 99 வீதமான ஆசனங்கள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ்கள் நிறுவனங்கள் பல பஸ்களிலும், இருக்கைகளை முன்பதிவு செய்து பயணிக்கும் விரைவு பஸ்களிலும் ஆசனங்கள் முன்பதிவு செய்யப்படுவதாகக் கூறுகின்றன.

இன்று மற்றும் 20 ஆம் திகதிகளில் கொழும்பில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு செல்லும் பஸ்களில் அனைத்து ஆசனங்களும் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேபோல், 22 ஆம், 23 ஆம் திகதிகளில் வெளி மாவட்டங்களில் இருந்து கொழும்பு வரும் பஸ்களில் 90 வீதமான ஆசனங்கள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கை போக்குவரத்துச் சபையின் பயணிக்கக்கூடிய பஸ்களில் மேற்படி நான்கு நாட்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசனங்கள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் 23ஆம் திகதி வரை சுமார் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஆசனங்கள் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால் 20, 22, 23 ஆகிய மூன்று நாட்களுக்கு அரச பஸ்களை வாடகைக்கு வழங்கவேண்டாம் என இலங்கை போக்குவரத்துச் சபைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

# 350 சிறைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு

## யாழில் 19 கைதிகள் விடுதலை

யாழ்ப்பாணம், செப் 13

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 19 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய சிறைக்கைதிகள் தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், நாடளாவிய ரீதியில் 350 சிறைக்கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 19 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் அவர்களில் மூன்று பேர் மீது வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதால் 16 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

நாடளாவிய ரீதியில், சிறிய குற்றங்களுக்காக தண்டனை அனுபவித்து வந்த கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (அ)

# மகனை கொன்றுவிட்டு தந்தை தப்பியோட்டம்!

கொழும்பு, செப். 13

கல்கிஸை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பொருபன பிரதேசத்தில் நபர் ஒருவர் கொல்லப்பட்டமை தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன் தினம் காலை குடும்பத் தகராறு முற்றிய நிலையில் கணவன் தனது மனைவி மற்றும் மகனைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த பெண் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பத்தில் ரத்மலானை பொருபன பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடைய சந்தேக நபரின் மகனே உயிரிழந்துள்ளார்.

கொலையை செய்த சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார். சந்தேகநபரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழில்...

வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க கடந்த 5ஆம் திகதி - வியாழக் கிழமை யாழ்ப்பாணத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டார். இதன்போது அவர், தெற்கில் மக்கள் மாற்றத்தை விரும்புகிறார்கள். அதற்கு எதிராக தமிழ் மக்கள் வாக்களிக்கக்கூடாது - என்ற சாரப்பட மிரட்டும் தொனியில் உரையாற்றியிருந்தார் என்று குற்றச்சாட்டுகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பிலேயே அநுரவை கைது செய்ய வேண்டும் என்று தற்போது முறைப்பாடு செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## யாழ்...

- கொழும்பு ரயில் சேவை ஆரம்பமாவது மேலும் தாமதமாகும் என்று தெரிய வருகிறது.

மாஹோ முதல் அநுராதபுரம் வரையான ரயில் பாதை திருத்திய மைக்கப்பட்டு வருகிறது. இதனால், கடந்த ஜனவரி 7ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில் சேவை நிறுத்தப்பட்டது. இந்த ரயில் சேவை கடந்த ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதும் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில், நேற்றைய தினம் மாஹோவிலிருந்து அநுராதபுரம் வரை பரீட்சார்த்த ரயில் ஓட்டம் நடைபெறவிருந்தது.

ஆனால், சுரங்கப் பாதை மற்றும் 6 ரயில் நிலையங்களின் புனரமைப்புப் பணிகள் நிறைவடையவில்லை என்பதாலும் சமிக்ஞை விளக்கு அமைப்பை நிறுவும் பணி முழுமை யடையவில்லை என்பதாலும் பரீட்சார்த்த ரயில் ஓட்டம் நிறுத்தப்பட்டது என்றும் தெரிய வருகின்றது. (ஐ)

## பிரதான...

பயணிப்பேன் - இவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பின் வெற்றியை அல்லது இலக்கை உடைப்பதற்கு இப்போது பல சக்திகள் இறங்கியுள்ளன. இந்த நபர்கள் இன்னும் சில தினங்களில் அல்லது தேர்தலுக்கு முதல் நாளிலோ என்னைப் பற்றி துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்படலாம்.

"நான் தேர்தலில் இருந்து ஒதுங்கி விட்டேன் என்றுகூட அவர்கள் துண்டுப்பிரசுரங்கள், காணொலிகளை வெளியிடக்கூடும். இவை எதையும் மக்கள் நம்ப வேண்டாம். விருப்பு வாக்கு, விருப்புத் தேர்வு என்னும் விடயத்தில் பலர் மக்களை குழப்பமடையச் செய்கின்றனர். தமிழ் மக்கள் குழம்பக்கூடாது - நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்று சங்கு சின்னத்துக்கு மட்டும் ஒரு புள்ளடியிடுங்கள் - அவ்வளவுதான்.

பொது வேட்பாளர் விவகாரம் இங்கு மட்டுமல்ல, இந்தியா உள்ளிட்ட சில நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. ஏனென்றால், எங்கள் விடுதலைப் போராட்டத்தில் அவர்கள் எல்லோருமே தவறு விட்டிருக்கின்றார்கள். இலங்கை மட்டும் எங்களை ஏமாற்றவில்லை - இந்தியாவும் எங்களை ஏமாற்றி இருக்கின்றது. இறுதிப் போரில் இனப்படுகொலையை செய்வதற்காக பல நாடுகள் இலங்கைக்கு துணை போயிருக்கின்றன. எனவே, அவர்கள் அனைவருக்கும் ஒரு மனசாட்சி இருக்கின்றது. இணைந்த வடக்கு - கிழக்கில் ஓர் அரசியல் தீர்வை தமிழர்களுக்கு வழங்க அவர்கள் தவறியிருக்கின்றார்கள். இந்தத் தவறை சுட்டிக்காட்டவேண்டிய உரிமை வடக்கு - கிழக்கு மக்களுக்கு இருக்கிறது. அதை ஒரு ஜனநாயக வடிவமாக இந்தத் தேர்தலில் நாங்கள் காட்டவுள்ளோம் - என்றார். (ஐ)

## சஜித்துக்கான...

"ஜனாதிபதித் தேர்தல் - 2024இல் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது தொடர்பான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

"வவுனியாவில் கூடிய மேற்படி தேர்தல் தொடர்பான குழு கட்சியின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை காலதாமதமின்றி நடைமுறைப் படுத்துவதற்கான ஒழுங்குகள் தொடர்பாகவும் அவருடன் பேசித் தீர்மானிப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது. அத்துடன், எதிர்வரும் 16ஆம் திகதி மீண்டும் கூடும் தேர்தல் தொடர்பான குழு, மேற்படி விடயங்கள் தொடர்பாக முன்னேற்ற மீளாய்வொன்றை செய்து மக்களுக்கு அறிவிக்கும்", என்றுள்ளது. (ஐ)

## கட்சி...

தமிழ் அரசுக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை அவர் நேற்று விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டவை வருமாறு,

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் கட்சியின் நான்கு மத்திய செயல்குழுக் கூட்டங்களில் ஆராயப்பட்டபோதும், "இணைந்த வடக்கு, கிழக்கில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சித் தீர்வை" தென்னிலங்கை வேட்பாளர்கள் முன்வைத்தால் மட்டுமே அவர்களை ஆதரிப்பது குறித்து பரிசீலிக்கலாம் என்ற எனது நிலைப்பாட்டை அனைத்துக் கூட்டங்களிலும் நான் அறுதியாக வெளிப்படுத்தியிருந்தேன்.

அந்த அடிப்படையிலேயே ஒகஸ்ட் 18ஆம் திகதிய கூட்டத்தில், தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை ஆராய்ந்து, மத்திய செயல்குழுவுக்கான சிபாரிசை முன்வைப்பதற்காக 6 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டது. ஆனால், அந்தக் குழு இணையவழியில்கூட ஒரு தடவையேனும் கலந்துரையாடாத நிலையிலேயே கடந்த முதலாம் திகதி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் தீர்மானம் அவசர அவசரமாக மத்திய குழுவில் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த தீர்மானத்தை நான் ஏற்கவில்லை என்பதையும் அந்தத் தீர்மானம் ஜனநாயக விரோதமானது என்பதையும் சுட்டிக்காட்டி நான் பொதுச்செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளேன். இந்த நிலையிலேயே கடந்த செவ்வாய்க் கிழமை 6 பேர் கொண்ட செயல்குழு 5 பேரின் பங்கேற்போடு வவுனியாவில் கூடியது.

இதன்போதும் நான், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதென்ற எனது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கப் போவதில்லை என்று மிகத் தெளிவாகக் கூறியிருந்தேன். பொது வேட்பாளருக்கான ஆதரவுத்தளத்தில் நீங்கள் நீண்டதூரம் சென்றுவிட்டதால் இனி அதிலிருந்து பின்வாங்க முடியாது என்பதை தானும் ஏற்பதாக சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இதேவேளை மத்தியகுழுவின் தீர்மானம் தொடர்பிலான எதிர் மனோநிலையை நானும், மாவை. சேனாதிராசா மற்றும் சீ. வீ. கே. சிவஞானம் ஆகியோரும் வெளிப்படுத்தியதோடு, கட்சித் தலைவரும் மூத்த உபதலைவரும் இணைந்து எமது மக்களுக்கான தெளிவூட்டல் அறிக்கையொன்றை எதிர்வரும் வாரம் வெளியிட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வாறிருக்க, சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் முடிவை நான் ஏற்றுக்கொண்டேன் என்று சுமந்திரன் குறிப்பிட்டுள்ளமை முற்றிலும் பொய்யானது. தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலிருந்து நான் பின்வாங்கப் போவதில்லை என்பதையும் மீண்டும் உறுதியளிக்கிறேன் - என்றுள்ளது.

# பொது வேட்பாளரையே சிறீதரன் ஆதரித்தார்!

## சீ. வீ. கே. சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 13

வவுனியாவில் சிறப்பு குழு கூடிய போது பொது வேட்பாளருக்கான ஆதரவு நிலைப்பாட்டையே சிறீதரன் வெளிப்படுத்தினார் என்று தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரின் பணிமனையில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில், இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் நிலைப்பாடு எதிர்வரும் 16 ஆம் திகதி அறிவிக்கப்படும். கடந்த முதலாம் திகதி மத்திய குழு எடுத்த தீர்மானத்தை மாற்றுவது - இரத்து செய்வது என்று முடிவு எடுக்கவில்லை.

16ஆம் திகதி வெளியாகும் இறுதி அறிக்கை 1ஆம் திகதிய நிலைப்பாடோடு உடன்படும் அதேவேளை பொது வேட்பாளருக்கான ஆதரவு நிலைப்பாட்டை சிறீதரன் வெளிப்படுத்தினார் - என்றார். (ஐ)

## தேர்தல் விதிமீறல்கள் 3,610 முறைப்பாடுகள்!

கொழும்பு, செப். 13

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 3 ஆயிரத்து 610 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 1,233 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 2,377 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. (ஐ)

## சிறுவர் உரிமைகளை பாதுகாக்கக் கோரி முல்லைத்தீவில் விழிப்புணர்வு நடைபவனி

முல்லைத்தீவு, செப். 13

சிறுவர் உரிமைகளை பாதுகாக்கக் கோரி, முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில், நேற்று முன் தினம் விழிப்புணர்வு நடைபவனி இடம்பெற்றது.

ஜெப ஆலய மிஷன் திருச்சபையின் கீழ் இயங்கும் பெத்தேல் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில், ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு முன்பாக, நேற்று முன் தினம் மாலை 3.30 மணியளவில், நடைபவனி ஆரம்பமானது.

சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு, நாம் சிறுவர், எம்மை காப்பீர் எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு நடைபவனியை, ஒட்டுசுட்டான் பிரதேச செயலக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் ம.வினோத் ஆரம்பித்து வைத்தார்.

இந்த நடைபவனி, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் இருந்து, ஒட்டுசுட்டான் சிறுவர் பூங்கா வரை இடம்பெற்றது.

இதில், வெத்தேல் சிறுவர் அபிவிருத்தி நிலைய இயக்குனர் காலெப் மற்றும் உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள், சிறுவர்கள் பங்கேற்றனர். (அ)

## வடக்கு...

இது ஒரு பௌத்த நாடு. ஆனாலும் எமது அரசாங்கம் அனைத்து மதங்கள், மொழிகள் மற்றும் சமூகங்களை பாதுகாக்கும். குறுகிய கால நன்மைகள், சலுகைகள் அல்லது பதவிகளுக்காக சிறீலங்கா பொதுஜன பெரமுன ஒருபோதும் செயல்படாது. எதிர்காலத்தில் எந்த சவாலையும் எதிர்கொள்ள தயாராக இருக்கிறோம் - என்றும் கூறினார். (ஐ)

## இலங்கைக்கு...

இதில், "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" என்ற தலைப்பில் நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானம் குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் உரையாற்றினார். தொடர்ந்து உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றினர். பின்னர், சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சிவில் அமைப்புகள் அறிக்கைகளை சமர்ப்பித்தன.

இந்த நிலையில், இலங்கை தொடர்பான தீர்மானம் இந்த மாதத்துடன் நிறைவுக்கு வருகிறது. இதனால், புதிய தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவது தொடர்பில் ஆராயப்பட்டது. எனினும், இலங்கையில் தற்போது தேர்தல் நடப்பதால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை மேலும் நீடிக்க இணை அனுசரணை வழங்கிய நாடுகள் ஆலோசனை தெரிவித்தன.

எனவே, மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நிறைவு நாளான எதிர்வரும் ஒக்ரோபர் 7ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தின் இணக்கப்பாட்டுடன் 51/1 தீர்மானம் வாக்கெடுப்பின்றி காலநீடிப்பு செய்யப்படும் என்று தெரிய வருகின்றது. ஆனால், இலங்கையின் புதிய அரசாங்கம் உடன்படாது விடின் காலநீடிப்பு தொடர்பில் வாக்கெடுப்பு நடத்த நேரும் என்றும் கூறப்படுகிறது. (ஐ)

## ரணிலின்...

மேலும், ரணில் விக்கரமசிங்கவின் அனுபவம், சர்வதேச நாடுகளுடன் அவருக்குள்ள உறவு மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வல்லமை ஆகியவற்றைக் கொண்டு, அவரே தொடர்ந்தும் இந்த நாட்டை வழிநடத்த வேண்டும் என்பதே நாட்டிலுள்ள பெரும்பாலானோரின் விருப்பமாக உள்ளது.

எனவே, வரவுள்ள 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் ஒவ்வொரு மக்களும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிசெய்யும் வகையில் அவரின் சின்னமான எரிவாயு சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களிப்பது அவசியம்.

கடந்தகால வரலாற்றை எடுத்துக் கொண்டால் ஆரம்பத்திலிருந்து ஈ.பி.டி.பி சரியான வழிகாட்டலை செய்து வந்துள்ளது. எமது கொள்கையும் - வழிமுறையும் சரியானதாக இருப்பதைக்கண்டு அதுதான் வெற்றியடையப் போகின்றது என்ற உண்மையை உணர்ந்த சக தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் அச்சம் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற ஒன்றை கட்டமைத்து அரசியல் செய்தார்கள்.

ஆனால், சக தமிழ் கட்சிகளிடம் நிலையான கொள்கை ரீதியான எந்தவொரு வேலைத் திட்டமோ அதற்கான பொறிமுறையோ இருக்கவில்லை. அது தொடர்பாக அக்கறையையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. எமது கொள்கையும் வழி நடத்தலும் சரியானதாக இருந்து வருகின்றமையால்தான் இம்முறை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் குறிப்பாக, தமிழ் மக்களிடம் நான் அறைவுவல் விடுக்கிறேன் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேர்தலுக்கு பின் தீவிர பாதுகாப்பு!

## கொழும்பில் முக்கிய இடங்களில் குவிக்கப்படவுள்ள பொலிஸார்

கொழும்பு, செப். 13

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு தேர்தலுக்குப் பிந்தைய காலத்தில் நாடளாவிய ரீதியில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, நாட்டின் பல பகுதிகளில் பொலிஸார் நிலைநிறுத்தப்படவுள்ளனர்.

அதேவேளையில், 21ஆம் திகதி தேர்தல் நாளுக்குப் பிறகு பாதுகாப்பை மேலும் அதிகரிக்கவேண்டியிருந்தால், முப்படை வீரர்களும் தயார் நிலையில் இருப்பார்கள் என்று மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நாள் மற்றும் தேர்தலுக்கு பிந்தைய காலம் முழுவதும், பாதுகாப்பு முதன்மையாக பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படை மூலம் நிர்வகிக்கப்படும்.

எனினும், தேவைப்பட்டால் உதவ ஆயுதப்படைகள் தயார் நிலையில் இருக்கும் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய இராணுவப் படைகள் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்புப் படைகளின் பிரதானி அனைத்து பாதுகாப்புப் படைத் தளபதிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

முன்னதாக, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயத்தமாக, தேர்தல் நடவடிக்கைகளை சுமூகமாக நடத்துவதற்காக 54,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வாக்குச் சாவடிகள், வாக்கு எண்ணும் மையங்களை நிர்வகித்தல், வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லப்படுவதைக் கண்காணிப்பது, ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் அதைத் தீர்ப்பது, அசம்பாவிதங்கள் இன்றி தேர்தல் நடைபெறுவதை உறுதிசெய்வது போன்ற பணிகளுக்காக நாடு முழுவதும் பொலிஸார் நிறுத்தப்படுவார்கள்.

21 ஆம் திகதி வாக்களிப்பு முடிவடைந்த பின்னர், முடிவுகள் அறிவிக்கப்படும் வரை வாக்களிப்பு நிலையங்களிலோ அல்லது வாக்கு எண்ணும் நிலையங்களிலோ குழுக்கள் கூடுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

# நாமலின் கூட்டம் மீது கல் வீச்சுத் தாக்குதல்!

கொழும்பு, செப். 13

பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச பங்கேற்கவிருந்த பிரசாரக் கூட்டத்தின் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை சிறிபோபுர பகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த கல் வீச்சு தாக்குதல்களில் சிறுவன் ஒருவர் காயமடைந்துள்ளார். காயமடைந்த சிறுவன் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கூட்ட அரங்கின் மீது சுமார் மூன்று கற்கள் வீசப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த பிரசார கூட்டத்தில் நாமல் ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, ஷிராந்தி ராஜபக்ஷ ஆகியோர் பங்கேற்கவிருந்தனர். கல் வீச்சுத் தாக்குதல்களைத் தொடர்ந்து அவர்கள் கூட்டத்தில் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஷிராந்தி ராஜபக்ச, காயமடைந்த சிறுவனை பார்வையிட அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்குச் சென்றார்.

# பொருளாதார தடை ஒரு கருவி மட்டுமே!

## அந்நாட்டு தமிழ் எம்.பிக்கு பிரித்தானியா பதில்

லண்டன், செப். 13

**இலங்கையின் மனித உரிமை நிலைமைகளை முன்னேற்ற வேண்டும் என்ற தங்களின் இலக்கை அடைவதற்கு உதவியாக இருக்குமாக இருந்தால், மனித உரிமைகள் மீறல்களுடன் தொடர்புபட்டவர்களுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை பயன்படுத்தப்படும் என்று பிரித்தானியா தெரிவித்துள்ளது.**

பிரித்தானிய பாராளுமன்றில், தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் உமா குமரன் எழுப்பிய கேள்விக்குப் பதில் வழங்கிய பிரித்தானிய வெளிவிவகார மற்றும் பொதுநலவாய விவகார செயலாளர் கத்தரின் வெஸ்ட், இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் விடயத்தில் பிரித்தானியா முக்கியத்துவம் வழங்கும் நாடாக இருக்கிறது.

பிரித்தானியாவின் வெளிநாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில், பொருளாதாரத் தடையை ஏற்படுத்துவதன் ஊடாக ஒரு நாட்டின் மனித உரிமைகள் உள்ளிட்ட நிலவரங்களில் முன்னேற்றம் ஏற்படுமாக இருந்தால் அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்த முடியும்.

ஆனால் எதிர்காலத்தில் இலங்கையர்களில் குறிப்பிட்ட சிலருக்கு எதிராக இப்பொருளாதாரத் தடையைப் பயன்படுத்த முடியுமா என்று அனுமானத்தின் அடிப்படையில் பதில்களை வழங்க முடியாது.

அவ்வாறு செய்வதனால் இது பாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திவிடக்கூடும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர்க்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் பிரித்தானியாவினால் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் சாத்தியம் இருக்கிறதா? என்று பாராளுமன்ற உறுப்பினர் உமா குமாரன் கேள்வி எழுப்பியிருந்தார். (அ)

# உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இல்லாதோரும் வாக்களிக்க முடியும்!

கொழும்பு, செப். 13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை இன்றியும் வாக்கைப் பதிவு செய்ய முடியும் என்று மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்பிரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார். வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புகின்றவர்கள் மாத்திரம் அன்றி, உள்நாட்டிலேயே வசிக்கின்றவர்களும் வாக்காளர் அட்டை இன்றி வாக்களிக்க முடியும்.

வாக்காளர் அட்டை என்பது வாக்காளர்கள் தாங்கள் வாக்களிக்க வேண்டிய தொகுதியை அடையாளம் காண்பதற்கும் வாக்குச்சாவடியில் தமது தொடரிலக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குமே வழங்கப்படுகிறது. வாக்காளர் அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் தங்களது அடையாள அட்டையை அல்லது அங்கீகரிக்கப்பட்ட சட்ட ரீதியான அடையாள ஆவணங்களைக் காண்பித்து வாக்கினைப் பதிவு செய்ய முடியும்.

அதேநேரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்துக்குப் பிரவேசித்து, தமது அடையாள அட்டை இலக்கத்தை வழங்கி தமது உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையின் பிரதியையும் பெற்றுக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த வழிகளில் வாக்காளர்கள், வாக்காளர் அட்டையின்றியே வாக்களிப்பதற்கான வசதிகள் இருப்பதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார். (அ)

# மிகவும் நூதனமாக இத்தாலிக்கு தப்ப முயன்ற சிரிய பிரஜைகள்!

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது

கொழும்பு, செப். 13

ஐக்கிய அரபு இராச்சியத்தின் போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இத்தாலியின் ரோம் நகருக்கு தப்பிச் செல்ல முயன்ற சிரிய நாட்டின் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஏழு பேர் கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டனர்.

நான்கு சிறிய குழந்தைகள் உள்ளிட்ட ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அனைவரும் நேற்று காலை சென்னைக்கு புறப்படவிருந்த இந்தியன் எயார்லைன்ஸின் ஏ.ஐ-282 விமானத்தில் செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலைய அனுமதிப் பணியை முடித்துக் கொண்டு விமான நிலைய குடிவரவு பகுதிக்கு வந்தவர்கள் மீது சந்தேகத்தின் அடிப்படையில், அவர்கள் அளித்த ஆவணங்களுடன் எல்லை ஆய்வுப் பிரிவுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட தொழிநுட்பச் சோதனையில் இந்த கடவுச்சீட்டுகள் போலியானவை என உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனையடுத்து, இந்த சிரிய பிரஜைகளிடம் நடத்திய விசாரணையில், தலா 2,000 அமெரிக்க டொலர்களை தரகர் ஒருவருக்கு செலுத்தி துருக்கியில் வைத்து இந்த கடவுச்சீட்டுகளை தயார் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

ஸ்கானர் டெஸ்ட், எலெக்ட்ரானிக் கேட்ஸ் போன்ற அதி நவீன சோதனைகளில் சிக்க முடியாத வகையில் உயர் தொழில்நுட்பசிப்களை பயன்படுத்தி இந்த கடவுச்சீட்டுகள் தயார் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சிரிய பிரஜைகள் முதலில் மலேசியாவுக்கு வந்து பின்னர் இலங்கைக்கு வந்தனர்.

அதன்பிறகு, அவர்கள் இந்தியா சென்று இத்தாலிக்கு தப்பிச் செல்ல திட்டமிட்டிருந்ததை குடியேற்ற அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சிரிய பிரஜைகள் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# நாடு திரும்புவோர் வாக்காளர் அட்டை இன்றியும் வாக்களிப்பதற்கு ஏற்பாடு!

கொழும்பு, செப். 13

வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்புவோர் வாக்காளர் அட்டை இன்றியும், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க முடியும் எனச் சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாட்டு இயக்கமான பெபவ்ரல் அறிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு, அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி இதனைக் குறிப்பிட்டார்.

வாக்களிப்பு இடம்பெறும் தினத்தன்று மதியம் நாடு திரும்பும் வாக்காளர்களும் தேர்தலில் வாக்களிக்க முடியும்.

தமது கடவுச்சீட்டை வாக்களிப்பு நிலையங்களில் காண்பித்து, குறித்த தினத்தில் நாடு திரும்பியதை உறுதிப்படுத்த முடியும் என்பதுடன், வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர் இருப்பின் எவ்வித தடையுமின்றி வாக்களிக்க முடியும்.

எனவே, எவரும் வாக்காளர் அட்டை இன்றி வாக்களிக்க முடியாது என எண்ணவேண்டாம் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்யாராச்சி தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.